முத்திரை



(பின்மாரிக்காலம், 2024)

"

.

Shakespeare's Desk



"முத்திரை" இதழின் ஆசிரியர் குழு :

புரவலர் : "சித்தாந்த ரத்தினம்" ப. கோவிந்தன்

கௌரவ ஆசிரியர்கள் : இலண்டன் பத்மநாப ஐயர்
கவிஞர் பாரதன், கம்பம்.

ஆசிரியர் : ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

உதவி ஆசிரியர்கள் : புனல்வேலி ஆல. தமிழ்ப்பித்தன்
'நீல நிலா' செண்பகராஜன்
சக்தி மகேஸ்வரி பொன்ராசு

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க :

தங்கள் படைப்புகளைத் தாளில் எழுதி அனுப்ப வேண்டாம். எந்தப் படைப்பானாலும், அதைக் கணினியில் **MS-Word "ஒருங்குறி - லதா"அல்லது "ஒருங்குறி - நிர்மலா"(Unicode - Latha or Unicode – Nirmala)** என்ற எழுத்து வடிவில் தட்டச்சு செய்யவும், படைப்புகளை எழுதி அனுப்பும் போது, பிழைகளை நீக்கி, சரி பார்த்து அனுப்பவும். ஒற்றெழுத்துக்களை வேண்டிய இடத்தில் சேர்த்துச் சந்திப்பிழை, இல்லாமல் அனுப்பவும். ஒவ்வொரு வாக்கியத்திலும், நிறுத்தற்குறி, அரைப்புள்ளி, காற்புள்ளி போன்றவைகளை நீங்களே இட்டுச் சரி செய்யவும். **90805 51905 / 87542 24076** வாட்சப் எண்களுக்கு அனுப்பவும்.

மின்னஞ்சல் : **rameshzillion@hotmail.com**

தயவு செய்து பிடிஎஃப் (pdf) வடிவில் படைப்புகளை அனுப்ப வேண்டாம்.

Disclaimer :

All the contents expressed in the articles in this magazine are pure, unadulterated fiction. The names, places and incidents do not correspond to anyone who lived in the past or those who are alive now. The views expressed in the articles are that of the corresponding authors of those articles and they do not necessarily reflect the views of the editorial board. This web magazine aims to foster literature and art and is meant for private circulation only. The views of the magazine are expressed in bonafide faith and are well substantiated by several sources. In case of courrrt litigation, the jurisdiction shall be at Srivilliputtur in Virudhunagar District only.

-- The Chief Editor

Muththirai (*Pinmaarikkaalam*) **Web magazine issue, September issue 2024.**

[meant for private circulation only.]

தொடர்புக்கு :

ஆசிரியர்
"ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்"
எண் **33** தெற்கு ரத வீதி
ஸ்ரீவில்லிபுத்தூர் அ. கு. **626 125**
விருதுநகர் மாவட்டம்.
அலை பேசி : (வாட்சப்) **90805 51905 / 87542 24076**
மின்னஞ்சல் : **rameshzillion@hotmail.com**

உள்ளே ......

ஆசிரியனின் மேசையிலிருந்து..... 

அன்புள்ள வாசக நெஞ்சங்களே,

வணக்கம். நலம். நலம் பொலிக !

எமது "முத்திரை" இதழின் பின்மாரிக்கால வெளியீடு இதோ உங்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. வாசித்து விட்டு, தங்கள் மேலான கருத்துகளைத் தெரிவியுங்கள். இந்த பதின்ம இதழ் வெளியீட்டை ஒரு தமிழ்ப்பணி போலே தொடர்ந்து செய்து வருகிறோம். எங்கள் பணி தொடரும் !!

வாழிய செந்தமிழ்...!! வாழ்க நற்றமிழர் !!!

வாழிய பாரத மணித்திருநாடு !! வந்தே மாதரம் !!

மிக்க அன்புடன்,

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

பூத்தல்

--- குமரேசன் கிருஷ்ணன்.

புளியம் பூக்கள்

பூக்கத் தொடங்கி விட்டன

முளைக் கட்டிய பயிராய்
வெளியேத் துருத்துகிறது
நினைவு.
உற்று உற்றுப் பார்த்தபடிக் கடக்கும்
அந்தக் கீரிப்பிள்ளைக்கு காத்திருப்பின் அவசியம்
புரியவா போகிறது ?
வயலில் வந்திறங்கிய நாரைகளும் ஓயாது கத்துகின்றன.
இதோ தூறல் வருகிறது.
அருகில் தான்
எங்கோ இருக்கிறாய் ~
நனைதல் ஒரு விதக் கிளர்ச்சி !.
பூமியின் பூத்தல்
நனைதலின் மிச்சமே.
நினைவில் உறைந்த மனதிற்கு
கூடுதலாய் என்ன வேண்டும் ?
பூத்து, மலர்ந்து, வாடி,
மறுபடியும் பூத்தல் தானே இயல்பு ?!
ஓயாத பூத்தலில் தான்
துளிர்க்கிறது, உயிர்.
சலனங்களைத் தந்து விட்டு
மழையென மறையாதே !
தூரத்து விடிவெள்ளியின்
நகர்வெனச் செல்கிறாய்
புள்ளியியிலிருந்து பூக்கிறது புதுத்துளி.

குமரேசன் கிருஷ்ணன்
(குறுங்கவிதைகள்)

நீண்ட வரிசையாய் செல்லும்
எறும்புக் கூட்டத்தில்
தனித்துத் திரும்பும்
ஒற்றை எறும்பே
கிசுகிசு காதருகே.

இந்த செம்பருத்தி பூக்கள் மலர்ந்து நிற்கிறது
யாரும் பறிக்காமல்
மலர்ந்து விழுதல்

எவ்வளவு கொடுமை.

ஜோடிப் பட்டாம்பூச்சிகள் போகும் இடமெல்லாம் ஜோடியாகவே போகிறது
ஏனோ தனித்த பட்டாம்பூச்சியைக் கண்டால் மனம் பதறுகிறது.

மெதுவாக ஊர்கிறது நத்தை.
வேகமாக செல்லென
அதனிடம் கூறாதீர்.
அது மெதுவாகவே
அதன் இடத்தை சென்றடையும்.

பனி மூடி நிற்கும்
இன்றைய காலையில்
பரிதி ஏன் வந்தான் ?
இன்று விடுமுறை
எடுத்தால் தான் என்ன !?

காற்றில்
இலைகளை உதிர்க்கின்றன மரங்கள்.
தரையிறங்குகின்றன
இலை மழைகள்.

பெண் மயில் தனித்து மேய்கிறது
ஆண்மையில் தோகை
விரித்து ஆடும்
அழகைக் காணாமல்
தனித்து மேய்ந்துதான்
என்ன பயன்.

இலையின் மீது அமர்ந்தபடி
இலையைக்
கொஞ்சம் கொஞ்சமாக
தின்றுக் கொண்டிருக்கிறது அந்தப் புழு.

---- **குமரேசன் கிருஷ்ணன்**.

கவிதை -- பத்மா குரு

என் கடக ரேகை ! மகர ரேகை !
பூ மத்திய ரேகை!
ஆர்டிக் துருவம்!
அண்டார்டிக் துருவம்!
அனைத்துமாய் நீயிருக்க...

ஆயுள் ரேகை மட்டும்
அனாதையாய்த் தேம்பியழுகிறது.

கிழக்கு மேற்கு
வடக்கு தெற்கு என...
என் திசைகளெல்லாம்...
நீயாயிருக்கையில்...

வாழ்வு மட்டும் திசை
தெரியா தேரிக் காட்டில் ...!

அன்பு மழையில்,
நனைய நினைத்தாலோ...
அமில மழையாய்

வந்து விழும் சொற்கள்!

தென்றலை எதிர்பார்த்தேன்
.சூறாவளி ஒன்று சுழன்றடிக்குது!

என் விருப்பப் பாடலில்...
ஏற்றப்பாட்டும் வேண்டும்
ஏற்றந்தரும் பாட்டும் வேண்டும்!
மாற்றம் ஒன்று வர வேண்டும்!
நீரே அதனைத் தர வேண்டும்!

-- -**பத்மா குரு, இராஜபாளையம்.**

"ஆடி"யிலே ஆண்டாள்புரம் !!!

--காளிராசு காளிமுத்து, ஜார்ஜியா மாநிலம்,

ஐக்கிய அமெரிக்க தேசம்

Kalirasu Kalimuthu
4255 Grandview Pointe Way
Cumming,
Georgia 30028, USA.

(அமெரிக்கா சென்று விட்டாலும், நம் நகரின் காவல் தெய்வம் ஆண்டாளின் மேல் கொண்ட பக்தியை மறவாத ஸ்ரீவில்லிபுத்தூர் பிரஜை இவர்)

'தக்ஷிணாயனம்' ஆரம்பமாகி ஒரு வாரத்திற்கும் மேலாகி விட்டது. சுமாராய் இருபது முப்பது வருடங்களுக்கு முன்பாக பொதிகை மலை மற்றும் குற்றாலத்தில் சீசன் களை கட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் இராசபாளையம் பகுதி வரைக்கும் ஒரு சாரல் அடிக்கும். ஓயாமலே மழை தூறும். தூறலினால் தென் கோடி பாண்டி நாட்டு மண்ணெல்லாம் மணக்கும். காதலினாலும் கசிந்துருகும். கானத்தினாலும் கரிய "மாற்" கடவுளையே கவிழ்த்துப் போட்ட தென்னாட்டு தமிழச்சி நாச்சியாரின் நற்பூமியிலே திருவாடிப்பூரம் தொடங்கும்;

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் அவதார தினமான பூர நட்சத்திர நாளைக் கணக்கில் கொண்டு, பத்து நாட்களும் உற்சவம் உற்சாகமாய் உள்ளம் அள்ளும்.

முதல் நாள் பகலிலே துவஜஸ்தம்பத்தில் கொடியேறி, இரவிலே பதினாறு வண்டி சப்பரத்தில் தன் கலாபக்காதலன் ரெங்க மன்னனுடன் அவள் முன்னே போக, ஒரு ஓரத்தில் அறிவொன்றும் இல்லாத அற்ப சிறுவனாய் ஒன்று – இரண்டு என பதினாறு சப்பரம் நகரும் வரையிலும் கைவிரல்களை எண்ணிக்கொண்டிருக்கும் கணக்குப் புலியென கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன் - "காளி" நான்;

வராக க்ஷேத்திரத்தில் பிரதானமாய் "தறியும் தறி சார்ந்த" பிரதேசமான நெசவாளர் பகுதியில் ஜனித்து வளர்ந்தவன் – மேலும் செய்யுந்தொழிலை சீர் தூக்கிப் பார்க்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை என்பது போல், அம்மாவின் வேலை முடித்த பிற்பாடு, காலார நடந்து போய் ஐந்தாம் நாள் கருட சேவை பார்க்கப்போனால் காத தூரம் போயிருப்பாள் கோபுரத் தெருவைத் தாண்டி "கோதை".

எப்படியாவது ஏழாம் நாள் சயன சேவை சேவித்திட, மாரியம்மன் கோவில் தெருவிலிருந்து திண்ணமான மனம் கொண்ட உடல் அயனமாகி, கீழ ரத வீதி வழியே நடந்து திருப்பாற்கடலைத் தாண்டி கிருஷ்ணன் கோவில் வந்து சேர்ந்தால், மங்கை அவள் மடி மீது தலை வைத்துக் கூடல்கொண்டிருப்பான் மாமனாம் "மால்" அவன்;

உலகளந்த உம்பர் கோமானுக்கு இறுமாப்பு இருந்தது. உன்மத்தம் கொண்டாள்- அவனின் உளமும் அளந்தாள் ஆண்டாள். மகுடிக்கு மயங்கும் நாகமாய் ஆனான் அவன். “மடி மீது தலை வைத்து விடியும் வரை தூங்குவோம்” என மதுர கானம் இசைத்தான். காதலர்களைக் கண்டவர்கள் தம் கண்களால் கைதும் செய்தனர்.

உயிருக்கு உணவு கிடைத்த களிப்பில் திரும்பவும் பெரிய கடை வீதி, சின்னக் கடை வீதி வழியாக நடந்து பேருந்து நிலையம் குவிவரைச் சந்திப்பில் போய் நின்றால், அங்கே பெரியதாய் ஒரு கூட்டம் நிற்கும். உடலுக்கு உணவாக திவ்யப்ரசாதமாய் சீனி மிட்டாயும், காரா சேவும் செட்டியார் லாலா கடையில் நெய்யாக நிறையும். மெய்யிலே பொய்யாக உதடு சுடும். ஆனாலும், மெய்யிலே மெய்யாக உளம் குளிரும்.

"இறந்த காலம்" இறந்து போய்க்கொண்டே இருக்கிறது. நிற்க...!

சுவையுச்சம் நிகழ்வுச்சமாய் வரும் ஆடி 22 (07-08-2014) பொன் கிடைத்தற்கரிய புதன் கிழமையில் பாவை ஆண்டாளும், பவள வாய்க் கமலச் செங்கண்ணனும் பெருந்தேரில் பவனி வருவர். அடிக்கரும்பாய் ஆண்டாளும், ஆடியும், ஆன்மாவை அள்ளும் !!!

திருவாடிப்பூரத்தாள் செகத்துதிப்பாள் !!!

----அன்பன் கவின்காளி🙂

தர்மகர்த்தா

(சிறுகதை)

****

பல தொழில்கள் புரிகின்ற பாட்டாளிகள் நிறைந்த கிராமம், எந்த நேரமும் உழைப்பு என்பதை தவிர ஒய்வை அறியாத கூட்டம் ,இக்கிராமத்திற்கு பள்ளிக்கூடம் தேவையா கோயில்கள் தேவையா, என்ற பட்டிமன்ற தீர்ப்புக்குப் பிறகு ஆலயமே என்று தீர்ப்பளிக்கப்பட்டது

அதன் அடிப்படையில் கிராம மக்கள் ஒன்று கூடி கோவில் கட்டுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

யாருக்கு என்பதில் பெரும் சிக்கலும் ஏற்பட்டது

எல்லா தெய்வங்களின் பெயரையும் எழுதிப் போட்ட பிறகு முருகன் என்றே பதில் வந்தது

"தமிழ்க்கடவுளப்பா முதல்ல முருகன்தான்"

பெருமையாய் பேசிக்கொண்டார் அங்குள்ள தமிழ் ஆசிரியர்,

"எப்பா கல்யாண முருகனா கல்யாணம் முடிக்காத முருகனா அதையும் முடிவு பண்ணுங்கப்பா " என்றார் கூட்டத்தில் ஒருவர்

"அப்படின்னா என்னங்கையா "

""தம்பி பாலமுருகன்னாகல்யாணம் முடிக்காதவர், வள்ளி தெய்வானை கூட இருந்தால் கல்யாணம் முடித்தவர்,

"குடும்பத்தோடு இருக்கிற முருகன்தான் வேண்டும்"

அப்படியே முடிவு செய்யப்பட்டது,

"சரி கோயிலுக்கு தர்மகர்த்தானு ஒருத்தர் வேணுமில்ல,

"எப்பா அதெல்லாம் கோயில் கட்டின பிறகு எடுத்துக்கலாம் பா,

"ஐயா அஞ்சு பேர் எடுங்க, அதுல ஒருத்தர் கோவில் தர்மகர்த்தாவா போடுங்க, ஏன்னா வசூலுக்கு போய் கேட்கிறதுக்கு நல்லா இருக்கும் இல்லையா,

"அதுவும் சரிதான் ஐயா,

"சரி கோவில் தர்மகர்த்தானு யார போடலாம்,

"தண்ணி அடிக்காதவன் சின்ன வீடு இல்லாதவன், பீடி சிகரெட் பிடிக்காதவன்,கஞ்சா புகையிலை தொடாதவன்,

"அப்படி ஒரு ஆள் வேணும்னா என் பையன தான் போடணும்,

"ஏலே மட சாமி உன் பையனுக்கு புடிச்சு மோளவே தெரியாதேடா,மூணாங்கிளாசு படிக்கிற பையன்டா,

"யாரு இல்லேனு சொன்னா இப்ப வரைக்கும் எந்த கெட்ட பழக்கம் இல்லாமல் வளர்த்து இருக்கேன், எவன் கூட சேர்ந்து என்ன பழக்கத்துக்கு ஆளாகத்தான்னு யாரு கண்டா,

"பெரியய்யா நம்ம சோணமுத்து மகன் கொஞ்சம் யோக்யன்,கல்யாணம் முடிக்கிற வயசுல ஒரு பொம்பள புள்ளையா வச்சிருக்கான்,

"யோ தெளிவா சொல்லுயா பொம்பளப்புள்ளைய வச்சிருக்கானா,பெத்துருக்கானா,

"இந்த ஊர் மாதிரி ஒரு அறிவாளியை உலகத்திலேயே பார்க்க முடியாதேடா,

"பின்ன என்னப்பா நீ பேசுறது அப்படி அவன் புரிஞ்சுக்கிட்டது அப்படி,

"கோயில் தர்மார்த்தாவுக்கு கொஞ்சம் வயசான ஆள போடலாம்ல,

"எதுக்கு கும்பாபிஷேகம் வச்ச அன்னைக்கே சாகவா,

"யோவ் உன் வாயில நல்ல வார்த்தையே வராதா,

"எப்பா அவனுக்கும் 50 வயசு ஆச்சுப்பா, அவனும் நல்ல ஒழுக்கமான ஆளுதான்,கோவில் தர்மகர்த்தாவுக்கு பொருத்தமான நபர் தான்

கொஞ்ச நேரத்தில் அவரை வர வைத்து கோவில் தர்மகர்த்தாவாக முடிவெடுத்தார்கள் அவனும் முழு மனதோடு ஏற்றுக் கொண்டான்,

"ரொம்ப நன்றி ஐயா என்னை தேர்வு பண்ணதுக்கு, ஆனா ஏன் செயல்பாட்டுக்கு யாரும் குறுக்க வரக்கூடாது, கொஞ்சம் வித்தியாசமா செய்ய நினைக்கிறவன்,

"என்ன அன்னதானத்தில் சோறு போடுறதுக்குப்பதில் கம்மங்கஞ்சி ஊத்துவோம்ங்றியா,இல்லை முருகன் பக்கத்துல வள்ளி தெய்வானைக்குப்பதில் ....

"அதில் எந்த மாற்றமும் இல்லை,

"முருகன் தப்பிச்சான்டா,

"தம்பி நீ எது செஞ்சாலும் சரியா தான் இருக்கும், உன்னோட தலைமையில கோயில் கட்டுனா போதும்,

தலக்கெட்டு வரி எவ்வளவு என தீர்மானிக்கப்பட்டது

தற்போதைய தர்மகர்த்தா ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார் சோணமுத்துமகன் கந்தன்,

கோயில் திருப்பணி சிறப்பாக நடை பெற்று ஓர் ஆண்டுக்குள் முழுமை பெற்றது,

கந்தன் பல கோயில்களுக்குப் போய் வந்தவனாதலால் நமது கோயில் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை விழா கமிட்டி யாரோடு கலந்து பேசி முடிவுக்கு வந்தான், உன் மனசு போலயே செய் கந்தா

குடமுழுக்குநாள் தேர்வு செய்யப்பட்டது,தமிழில்தான் மந்திரங்கள் ஓத வேண்டும் என்பதில் மிகச்சரியாக தெளிவாக இருந்தான் கந்தன்,

கோயிலைச்சுற்றி நோட்டமிட்ட ஒருவர் வியந்து போய்,இரண்டு லட்சம்,நன்கொடையும்,அன்னதானம் முழுவதும் என் செலவு என ஏற்கெனவே ஒப்புதல் அளித்ததை கந்தன் பெருமையோடு ஊர் மக்களிடம் கூறினான், வந்திருந்த அனைவருமே வியந்தார்கள்,எப்படியும் ஊருக்குள் இரண்டு பேர் இருப்பார்களே தன் வயிற்றெரிச்சலை கொட்டுவதற்கு

"என்னய்யா வித்தியாசமாக கட்டிட்டாங்கற, வசூலித்த பணத்தை எல்லாம் என்கிட்ட கொடுத்தா யார் வேணாலும் கட்டலாம்,

"எப்படி இரண்டாம் தரமா மூணாம் தரமா,

அன்று நடந்த ஆன்மீக சொற்பொழிவில் கோவில் தர்மகர்த்தா கந்தனுக்கு சிறப்பாக மரியாதை செய்யப்பட்டது ,

"அப்படி என்ன கோயிலக்கட்டி கிழிச்சிட்டான், அட போய் தான் பாப்போமே, என்ற வயிற்றெரிச்சல் பேர்வழிகள் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டார்கள், அவர்கள் கண்டது,

ஆலய சுவர்களில் அங்கங்கே கவிஞர்களின் திருவுருவப்படங்கள், போராட்ட வீரர்களின் திரு உருவப் படங்கள் சித்தர்களின் பொன்னான கருத்துக்கள், நன்கொடை யாளர்களின் கல்வெட்டுப் பெயர்கள், ஆனால் எந்த இடத்திலும் கந்தன் தன் பெயரை காட்டியதே இல்லை,

"கோவில் நிர்வாகிகள் பெயர் கல்வெட்டுல இல்லையே,

"நம்ம ஊரு பொதுமக்கள்னு போட்டாச்சு அது போதும்,

அடக்கமாக சொன்னான் கந்தன்!

------- **சீனியம்மாள் தமிழ்ப்பித்தன்**

எல்லையில்லாப்புகழ் கொண்ட நெல்லை

தாமிரபரணிக்கரையில் கிடைத்த பொக்கிஷங்கள்.



தாமிரபரணிக்கரையில் வாழ்ந்த, வாழும் புண்ணிய புருஷர்களைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களில் பலர் காலத்தால் அழியாத காவியம் படைத்தவர்கள். அவர்களை நினைவு கொள்வதில் மனது திருப்தி தருகிறது.
இதோ அந்தப்பட்டியல்....!
பொதிகை சால் தமிழ் முனி அகஸ்தியர், வெள்ளையனை எதிர்த்த .வ.உ சிதம்பரம் பிள்ளை, முண்டாசுக்கவி எட்டயபுரம் சுப்ரமணிய பாரதியார், வீரமுழக்கமிட்ட பூலித்தேவன் வீரபாண்டிய கட்டபொம்மு, ஒட்டப்பிடாரம் தானாபதி சிவசுப்பிரமணிய பிள்ளை, ஆழ்வார் திருநகரி அனுசுயா தேவி, சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள், கோவில்பட்டி சங்குசாமி சித்தர், கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள், தமிழ் இலக்கண வரலாறு தந்த கா. சுப்பிரமணியன், வண்ணச்சரபம்..தண்டபாணி தேசிகர், பத்தமடை சிவானந்தர், வல்லநாடு சாது சுவாமிகள், ஹரிகதா சக்கரவர்த்தி..அரிகேசநல்லூர்.முத்தையா பாகவதர், ஆஷ் துரையை ஒழித்த வீர வாஞ்சிநாதன்,

திராவிட மாபாடிய கர்த்தர் விக்கிரமசிங்கபுரம் மாதவச் சிவஞான முனிவர், கம்பன் காவிய கைவிளக்கு .தென்திருப்பேரை பி. ஸ்ரீ. ஆச்சாரியா, சிலேடை வெண்பா தந்த வெ ப. சு., இலக்கிய வரலாறு தந்த பூரணலிங்கம் பிள்ளை, "சிறுகதை மன்னன்" புதுமைப்பித்தன், எழுத்தாளர் வல்லிக்கண்ணன், திறனாய்வாளர் தி.க.சி. வண்ணநிலவன், வண்ணதாசன், முதல் சாகித்ய அகாதமி விருது பெற்ற ரா. பி. சேதுப்பிள்ளை, தொ.மு.சி.ரகுநாதன், மீனாட்சிபுரம் மீ.ப. சோமு, ரசிகமணி டி.கே.சி., குறள் பணியாற்றிய ஊர்க்காடு நவநீதனார், வாழவந்தாள்புரம் ரா.இளங்குமரன், சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவர், பெஸ்கி ஞானியார், ஜி. யு. போப், கால்டுவெல்.ஐயர், அரபிக் கவிஞர் சதக் அப்துல்லா, தோப்பில் முகம்மது மீரான், வக்கீல் மகர பூஷணம், தவில் மன்னன் சிங்கிகுளம் கணேசன், நாதஸ்வர சக்ரவர்த்தி.காருகுறிச்சி அருணாசலம், தூத்துக்குடி கைலாச கவிராயர், நெல்லை .நம்பிக்கம்பர், சுத்தமல்லி . ராமசுப்ரமண்ய தீட்சிதர், 3 கவர்னர்களிடம் பரிசு வாங்கிய பன்மொழி வித்தகர் எழுத்து சித்தர்

பாஸ்கர தொண்டைமான், இசை வளர்த்த.கடையநல்லூர் சண்முகசுந்தரம், இசை மேதை சாம்பவர் வடகரை. ஆபிரகாம் பண்டிதர், இடைக்கால் சங்கரன், பாளை.இசக்கி கம்பர், கழுகுமலை சித்தன் சுப்பையா, நெல்லை ஸ்தல புராணம் தந்த நெல்லையப்ப பிள்ளை காந்திமதி, பிள்ளைத்தமிழ் தந்த அழகிய சொக்கநாத பிள்ளை, கீழ ஆம்பூர். ஏ. என். சிவராமன், கரிவலம் வந்த நல்லூர் பொன்.பரமகுரு, வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், கயத்தாறு காளமேகப்புலவர், தேவநேயப்பாவணர், பிபின்.சந்திரபாலர், ஊமைத்துரை, விருத்தி உரை தந்த குளத்தூர் அமுதாம்பிகை, சாவித்ரி நாடகம் தந்த பெருங்குளம் மாதவையா, வரலாற்று ஆய்வாளர்கள் கல்லிடைக்குறிச்சி நீலகண்ட சாஸ்திரிகள், நெல்லை செந்தில் செல்லக்குமரன், பாபநாசம் ஸ்தல புராணம் தந்த முக்காலிங்க முனிவர், குற்றாலம் ஸ்தல புராணம் தந்த .திரிகூட ராசப்பக் கவிராயர், மேம்பாலம் தந்த சுலோச்சனா முதலியார், குலசை உலா தந்த.!மதுகவி சுப்பிரமணிய முதலியார், உயிர் வருக்க செய்யுள் தந்த கவிராஜ..நெல்லையப்ப பிள்ளை, பிரம்மதேசம் சர்வக்ஞாத்நேத்ர சரஸ்வதி சுவாமிகள், கல்லிடைக்குறிச்சி வேதம் அய்யா சுவாமிகள், சிவ சைலம் அய்யம் பட்டர், அகரம் முத்துசுவாமி தீட்சிதர், ரவணசமுத்திரம் அபிநவ ஜனகர், நீலகண்ட ஐயர், பாலாமடை முத்துசாமி தீட்சிதர், கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், தாமிரபரணி மஹாத்மியம் தந்த. ஆத்தூர் கணபதி சாஸ்திரிகள், எட்டையாபுரம் முத்துசுவாமி தீட்சிதர், தமிழறிஞர் ச. வே..சு., நாட்டுப்புற பேராசிரியர்..நா. வானமாமலை, பத்திரிகையாளர்களில் “தினமலர்” ராமசுப்பு ஐயர், தென்காசி கோபுரம் கண்ட சிவந்தி ஆதித்தனார், தினகரன்” கந்தசாமி ஐயா, “தினத்தந்தி” “பாலசுப்பிரமணிய ஆதித்தன், “மாலை முரசு” டி எஸ்.சொக்கலிங்கம், பொருநை இலக்கிய வட்டப் புரவலர் மேடை தளவாய் முதலியார், கடிகை முத்துப்புலவர், பெத்தன தளவாய், ஒப்பில்லாக் கவிஞர் சுப்பிரமணிய தம்பிரான், நன்னூலுக்கு வித்திட்ட .நமசிவாய புலவர், தலைமலை கண்ட தேவர், சிவசங்கர பாண்டியனார், துரிதகவி திருமலைக் கொழுந்து, கவிராயர் சாயர்புரம் ஹெச். ஏ. கிருஷ்ண பிள்ளை, புலவர் திருப்பாற்கடல் நாதன், நாகூர் முத்துப்புலவர், கணித மேதை எஸ். எஸ். பிள்ளை,

திரை உலகில் முதல் பட்டினத்தார் சா. சுந்தரமூர்த்தி ஓதுவார், டி..எஸ்..பாலையா, சந்திரபாபு, எஸ். வி.சுப்பையா, டி.பி. முத்துலட்சுமி, எட்டையபுரம் சோமசுந்தர பாரதியார், ஈசானிய தேசிகர், வடிவேற் கவிராயர், சாலிவாடீஸ்வர ஓதுவார், தாமிரபரணி புராணம் பாடிய சங்கரன் பிள்ளை, தமிழ் பாவை கடையம் செல்லம்மா, ரோமசர் துர்வாசர் ஹயக்ரீவர், அத்ரி.போன்ற பல முனிவர்கள்,

வைணவப் பெரியார்கள் மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், திருக்குறுங்குடியில் உறைந்த திருமங்கையாழ்வார், குமரகுருபரர், தென்காசி பாண்டியர் அதிவீரராமன், முதலாம் குலோத்துங்கன் ராஜராஜ சோழன், குலசேகர பாண்டியன், நின்ற சீர் நெடுமாறன், வடமலையப்ப பிள்ளையன், அரியநாத முதலியார், விட்டல மஹாராஜா, ராமக்கோன், உக்கிரவழுதி பாண்டியன், சங்கரநாயனாரைக் கண்ட காவல்புறையன், கொற்கையை ஆண்ட வெற்றிவேல் செழியன்,

இந்தப்பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே போகும். அளவு கருதி இத்துடன் முடித்துக் கொள்கிறோம். நதிக்கரையில் தான் நாகரீகங்கள் வளர்ந்தன. தாமிரவருணி நாகரீகம் என்று

ஒன்று இருந்தது. தாமிரவருணி நதி உற்பத்தியாகும் பொதிகை மலையில் தான் தமிழ் தோன்றியது. குறுமுனி அகத்தியனும் அங்கு தான் தோன்றினான். தமிழ் வளர்த்தான்.

தாமிரவருணி நதியின் இரு கரைகளிலும் தமிழும், இயலும், இசையும், இலக்கியமும், அறிவு சார்ந்த கல்வியும் வளர்ந்தன. அறிவை வளர்த்தன. நெல்லை மாவட்டம் ஒரு கலை, இலக்கிய, அறிவு சார் பண்பாட்டு மையம்.

அடுத்த தடவை, அடியேன் திருநெல்வேலி செல்லும் போது, அந்த மண்ணைத்தொட்டு வணங்க விரும்புகிறேன். .

தமிழ்ச்செல்வி

-- சக்தி மகேஸ்வரி, இராஜபாளையம்

தமிழ்ச்செல்வியைப்பார்க்கும் போதெல்லாம் என் தாய் மாமா மணிகண்டனின் நினைவே வருகிறது. ஆண் பிள்ளையாக இருந்திருந்தால் மாமா மாதிரியே இருந்திருப்பாள். மாமாவைப் போல் நல்ல உயரம். அதே முகம். பார்க்கப் பாவமாக இருக்கிறது. தகப்பன் இல்லாத பிள்ளை. இந்த வருடம் 12-ஆம் வகுப்பு முடித்திருக்கிறாள். தமிழ்ச்செல்விக்கு 1 ½ வயது இருக்கும் போதே மாமா இறந்து விட்டார். குடித்து, குடித்தே உடல் நலம் பாதிக்கப்பட்டு, இறந்து விட்டார்.

திருநெல்வேலி, தாமிரபரணி பாயும் அழகான ஊர். பேட்டையில் தாத்தாவுக்கு சொந்த வீடு இருந்தது. தாத்தா ஞானமணி தச்சு வேலை பார்ப்பார்.

பாட்டி செல்லம்மா, வீட்டு வேலைகளைக் கவனிப்பார். அற்புதமாக சமையல் செய்வார். சுவையாகத் தின்பண்டங்களைச் செய்வார். என் அம்மா, அமுதவல்லி சித்தி, கஸ்தூரி மாமா என மூன்று பிள்ளைகள் இவர்களுக்கு

இரண்டு பெண்களும் மூத்தவர்கள். மாமா தான் கடைசி. பேட்டையில் பெண்கள் வீட்டில் வைத்து, பீடி சுற்றுவார்கள். அம்மாவும், சித்தியும் பீடி சுற்றுவார்களாம். அம்மா சொல்லுவாள்.

அம்மாவுக்கு 17 வயதில் திருமணம் ஆகி விட்டதாம். அப்போது மாமாவுக்கு ஆறு அல்லது ஏழு வயது இருக்குமாம். அதன் பிறகு சித்திக்கு திருமணம் ஆனதாம். அக்காக்கள் இருவரின் பாசமும், அன்பும் இல்லாமல் போனது மாமாவுக்கு. அப்பொழுது மாமா பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்களாம். நண்பர்களின் சகவாசம் சரியில்லாமல், புகை பிடிப்பது, மது அருந்துவது போன்ற கெட்ட பழக்கங்கள் ஆரம்பமாகி இருக்கிறது.

இதில் தாத்தா வேறு. பேருந்தில் செல்லும் போது, கீழே விழுந்து, அவருக்கு இடுப்பு ஒடிந்து விட்டது. பாட்டி ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து, மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது, மாமா 10 –ஆம் வகுப்பு முடித்திருந்த நேரம். குடும்பச்சூழ்நிலை காரணமாக மேலே படிக்க முடியாமல் போய், தச்சு வேலைக்குப்போக ஆரம்பித்து இருக்கிறார்.

தாத்தா நல்லா சாமி கும்பிடுவார். வருடா வருடம் ஐயப்ப சுவாமி கோவிலுக்கு மாலை போட்டு, போய் வருவார். ஆன்மீகச்சுற்றுலா கூட்டிச்செல்லுவார். தாத்தா நல்ல நிறம். ஒல்லியான உடல்வாகு. நடிகர் சாருஹாசன் ஐயா மாதிரி இருப்பார்.

பாட்டி செல்லம்மா, தீபாவளி என்றால், முறுக்கு, அதிரசம், முந்திரிக்கொத்து, வடை எனத்தின்பண்டங்கள் செய்து தாத்தாவிடம் கொடுத்து அனுப்புவாள். அது வரும் வரைக்கும் எதிர்பார்த்து காத்து இருப்போம். அவ்வளவு ருசியாக இருக்கும். தாத்தா கீழே விழுந்த பிறகு எதுவும் வருவதில்லை. அதிலும் பாட்டி வைக்கும் மீன் குழம்பு அவ்வளவு ருசியாக இருக்கும்.

பள்ளி விடுமுறையில், ஊருக்குப்போவோம். வாய்க்காலுக்கு குளிக்கப்பாட்டி கூட்டிக்கொண்டு போவாள். நல்லா குளிப்போம். அருகில் மீனாட்சி திரையரங்கு இருக்கும். படம் பார்ககப்போவோம். மாமாவோடு விளையாடுவோம். மாமா வேலை முடிந்து வரும் போது, தின்பண்டங்கள் வாங்கி வருவார்.

நாளாக, நாளாக, மாமாவுக்கு மது குடிக்கும் பழக்கம் அதிகமாகி விட்டது. நண்பர்களுடன் சேர்ந்து குடித்து விட்டு, இரவு வெகு நேரம் கழித்து, வீட்டுக்கு வருவார். தாத்தா, என் அம்மா, சித்தி, என் அப்பா, யார் சொன்னாலும் "சரி" என்று சொல்லி விடுவார். மறுபடியும் குடிப்பார். "குடிகாரன் பேச்சு, விடிஞ்சாப்போச்சு" என்ற கதை தான்.

மாமா, அம்மாவையும், சித்தியையும், உடன் அழைத்துக்கொண்டு, திருச்செந்தூர் சென்று, தமிழ்ச்செல்விக்கு மொட்டை போட்டு, "அக்கா, எம் பிள்ளையை பாத்துக்கோங்க!" என்றார்களாம்.

ஒரு மாதம் கழித்து, காலை ரத்த வாந்தி எடுத்திருக்கிறார் மாமா. ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருக்கிறார்கள். "முடிந்து விட்டது" என்று மருத்துவர்கள் சொல்லி இருக்கிறார்களாம். என்னை சித்தி மகள் கைபேசியில் தொடர்பு கொண்டு, "அக்கா, மாமா நம்மளை எல்லாம் விட்டுட்டுப்போய்ட்டார்" என்று சொல்லி அழுதாள். தூக்கி வாரிப்போட்டது எனக்கு. உடனே நானும் வீட்டுக்காரரோடு கிளம்பினேன்.

பாட்டி, "எனக்குக்கொள்ளி வைக்காமல், நீ போய்ட்டயே !" என்று அழுதாள்.

"கூடப்பிறந்தவன்னு நீ ஒருத்தன் தான் இருந்த. நீயும் போய்ட்டியே!" என்று அம்மாவும், சித்தியும் அழுதார்கள். நாங்களும் அழுதோம்.

"என்னையும், பிள்ளையையும் நடுத்தெருவுல விட்டுட்டு, போய்ட்டீங்களே !" என அத்தை அழுதாள்.

உறவுகள் எல்லாம் வந்து, "பாவம் சின்னப்பிள்ளையை, இனி எப்படி வளர்த்து ஆளாக்கப்போறாளோ?"ன்னு அழுது விட்டுச்சென்றார்கள்.

தாய் மாமா உறவுங்கறது அற்புதமானது. அக்கா பிள்ளைகளிடம் பாசமாகவும், அன்பாகவும், இருப்பார். கேட்டதெல்லாம் வாங்கிக்கொடுப்பார். இன்று அவர் பிள்ளைகளைப் பார்க்காமல் போய் விட்டார்.

ஆம் ! "குடி குடியைக்கெடுக்கும் !" என்பது பழமொழி, இந்தப்பாழாய்ப்போன குடி, அவரின் வாழ்வையே குடித்து விட்டது. நாசமாய்ப்போற குடியை மாமா நிப்பாட்டி இருந்தால், இன்று அத்தையையும், தமிழ்ச்செல்வியும், நல்லா இருந்துருப்பாங்க. தமிழ் நாட்டில்,

தமிழ்ச்செல்வியைப்போல, அப்பாக்களை இழந்து விட்டு, ஏக்கத்தோடு தவிக்கும் மகள்கள் அதிகம்.

அப்பாக்கள் இதைப்புரிந்து கொண்டு திருந்துவார்களா ?

வெற்றி

மண் துளைத்துச் செல்லும் வேர்களால்,

மரங்களில்

கனிகள் வெற்றி.

பெண் படும் பாடு

பெருந்துன்பமானதால்

வாழ்வில் வெற்றி.

அழுத்தமான உள்ளமெனில்

அனைத்திலும் வெற்றி !,

எழுத்துக்களில் எழுச்சியெனில்,

எதற்கெடுத்தாலும் வெற்றி !!

---- **சீனியம்மா தமிழ்ப்பித்தன்**

சுதந்திரத் தினக் கொண்டாட்டம் -- இரு விதங்கள்

1. தம்பிரான் கொண்டாடிய விடுதலை

1947-ல், நம் இந்தியத்திருநாடு, நள்ளிரவில் சுதந்திரம் பெற்றது. 'சுதந்திரம் அளிக்கிறோம்' என்ற முடிவை நேருவிடம் கடைசி ஆங்கில வைசிராய் மௌண்ட்பேட்டன் நள்ளிரவில் கூறினார். உடனே சுதந்திரத்தை அறிவித்து, நம்மவர் அரியணை ஏறும் அதிகாரபூர்வ விழாவிற்கு ஏற்பாடு செய்வதில் நேரு முனைந்தார். அவரோ சடங்குகள், மதங்களில் பழக்கப்பட்டவரல்லர். எனவே, இராஜாஜி அவர்களிடம் கூறினார். அந்த மூதறிஞர் உடனே திருவாவடுதுறை ஆதீனத்தைத் தொடர்பு கொண்டார். அன்றைய ஆதீனம் அப்போது காய்ச்சலால் அவதியுற்றுக்கொண்டிருந்தார். எனவே ஆதீனக்கட்டளைத்தம்பிரான் ஒருவரையும், ஓதுவார் ஒருவரையும் டெல்லிக்கு தனி விமானத்தில் அனுப்பி வைக்க ஏற்பாடாயிற்று.

புறப்படும் போது, ஓதுவார் அச்சத்துடன் ஆதீனத்தைப்பார்த்து அரசு விழாவில் தான் பாடவேண்டிய திருமுறைப்பாடல் எது எனக் குறிப்பிட்டுக் கட்டளை இட வேண்டும் என்று கேட்டார்; ஆதீனமும் சொன்னார்.



செங்கோல் சிறப்பு 15-8-1947

விமானத்தில் ஏறி டெல்லிக்குக் கட்டளைத் தம்பிரானும் ஓதுவாரும் சென்றாயிற்று. அன்று காலை, உலகே வியந்து நோக்கிய விழாவும் வந்தது. கட்டளைத்தம்பிரான் நேருவிடம் உரிய நேரத்தில் ஆதீனம் கொடுத்தனுப்பிய தங்க முலாம் பூசிய ஆணைச்செங்கோலைக் கொடுத்தார். ஓதுவார் அப்போது கோளறு பதிகத்தின் இறுதிப்பாடலாகிய இந்தப்பாடலைத் தான் பாடினார்; அவர் கம்பீரமாகப்பாடிய இப்பாடலின் இறுதி வரி:

'அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே !'

அடடா! இந்நாடு விடுதலை பெற்றது சம்பந்தரின் செந்தமிழ் வாக்கினால் என்னும் போது உடல் சிலிர்க்கிறது; உள்ளம் பூரிக்கிறது.

எத்தனையோ மொழிகள் இந்நாட்டில் நிலவ, பக்தி மணம் கமழ, நம் செந்தமிழ் ஒலிக்க நாடு விடுதலை பெற்றது !

2. 'தமிழர் **தந்தை** ' என்பவர் கொண்டாடிய விடுதலை



இப்படி இந்திய துணைக்கண்டமே, காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதைக்கொண்டாடிக்கொண்டிருந்த போது, 'தமிழர் தந்தை' **(?!)** என்று அழைக்கப்படுபவர், அதே சுதந்திர தினத்தை துக்க தினமாக அறிவித்தார். இந்தியாவை விட்டு, பிரித்தானியர்கள் வெளியேறிச்செல்ல வேண்டாமென்று அவர்களின் காலைப்பிடித்துக்கெஞ்சினார். அத்துடன், 'திராவிடன்' என்ற பத்திரிகையில், சுதந்திர தினத்தை துக்க தினமாக அறிவித்து , வெள்ளையர்களுக்கு தாங்கள் ஷூ பாலிஷ் போடும் அடிமைத்தனத்தை பறைசாற்றினார். அநேக சுதந்திரப்போராட்டத்தியாகிகளின், விடுதலை உணர்வுக்கு நேர் எதிராக தேசத்துரோகம் செய்த அந்த 'தமிழர் தந்தை' வேறு யாரும் அல்ல.. 'பகுத்தறிவுப்பகலவன் , 'தென்னாட்டு சாக்ரடீஸ்' என்று கண்டபடியெல்லாம் புகழப்படும் ஈ.வே. ராமசாமி நாயக்கர் என்பவர் தான் அந்த நபர். ஒரு புறம் தேச விடுதலையை, மிகவும் பயபக்தியோடு, இறை வணக்கம் பாடி வரவேற்ற தேச பக்தர்கள் எங்கே **?** அந்நியர்களே இந்த நாட்டை ஆளட்டும் என்று அடிமைத்தனம் புரிந்த 'திராவிட இயக்கத்தலைவர்கள்' எங்கே **?!** இரண்டையும் ஒப்பிட்டுக்கூடப்பார்க்க இயலவில்லை. –

ஆதாரம் :

1. முது முனைவர் மு பெ. சத்தியவேல் முருகனார் எழுதிய ‘**கோளறு பதிகம்--விரிவுரை**’ நூலிலிருந்து.
2. கட்டளைத்தம்பிரான், பண்டித நேருவிடம் தங்க முலாம் பூசிய செங்கோலை அளித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம், இந்த செங்கோல் தான், தற்போது, நமது புதிய இந்திய பாராளுமன்ற கட்டிடத்தில் சபாநாயகரின் இருக்கைக்கு அருகே வைக்கப்பட்டுள்ளது.

சமஸ்கிருதம் வழக்கொழிந்த மொழியா ?

சமஸ்கிருதம் இறந்து போன மொழியா ?

"சமஸ்கிருதம் ஒரு வழக்கொழிந்த மொழி. அது ஒரு இறந்து போன மொழி. (Sanskrit is a dead language.) அது ஓர் ஆரிய மொழி. அதைப்பயன்படுத்த முடியாது. அது தேவையில்லை." என்றெல்லாம் இந்த மாநிலத்தில் உள்ள திராவிட இயக்க அரசியல் கட்சிகள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அவதூறு பரப்பிக்கொண்டிருக்கின்றன. இது உண்மை தானா? சமஸ்கிருதம் ஒரு இறந்த மொழியா? அதனால் ஒரு பயனும் இல்லையா? என்ற கேள்விகள் அத்தியாவசியமானவை. இந்த இயக்கங்களின் பொய், பிதற்றல்களுக்கு மறுமொழி கூற யாரும் இல்லாததால், இவர்கள் சொன்னதே உண்மையென்றாகி விட்டது. போதாக்குறைக்கு, இந்த நாத்திகப்பிரச்சாரம் செய்பவர்கள் (அதாவது, ஹிந்து மதக்கடவுள்களுக்கு மட்டும் எதிராக நாத்திகப்பிரச்சாரம் செய்பவர்கள்.) சம்ஸ்கிருத மொழியை தூற்றி, வசை பாடி,

அரசியல் லாபம் பார்த்து விட்டனர். மொழியை வைத்துக்கொண்டே அரசியல் செய்து, ஆட்சியதிகாரத்தைப்பிடிக்கலாம் என்று முதன் முதலாக உலகுக்கே சொல்லிய மாநிலம் அநேகமாக நம் தமிழ் மாநிலமாகத்தான் இருக்க முடியும். வாதத்துக்கு பதில் உண்டு. விதண்டாவாதத்திற்கு பதில் கிடையாது. தங்களைத்தாங்களே அறிவாளிகள் என்று கிரீடம் சூட்டிக்கொள்பவர்களைப்பார்த்து பரிதாபப்படத்தோன்றும்.

மொழி என்றால் என்ன ?

முதலில் மொழி என்றால் என்னவென்று பார்ப்போம். மொழி என்பது **என்ன?** அது, எண்ணங்களின் வாகனம். அவ்வளவு தான். ஆனால், ஒவ்வொரு மொழிக்கும் ஒரு சிறப்பு பயன்பாடு இருக்கிறது. உதாரணத்திற்கு சில : ஆங்கிலம் என்பது ஒரு வணிக மொழி. தமிழ் என்பது ஒரு இலக்கிய மொழி. இலக்கியம் எழுத தமிழ் மொழி சிறந்தது என்பது மொழியியலாளர்களின் கூற்று. பிரெஞ்சு மொழி என்பது காதலின் மொழி. காதலை வெளிப்படுத்த ஏற்ற மொழி பிரெஞ்சு மொழி என்பர். தெலுங்கு மொழி, இசையின் மொழி. அதில், இசை கீர்த்தனைகள் இயற்றி பாடுவதற்கு ஏற்றது. ஆனால், சமஸ்கிருதம் என்பது தேவ மொழி. அதாவது , தெய்வத்தை ஆராதிக்கக்கூடிய மொழி அதுவே. இதனால் தான், நமது பாரத தேசத்தின் ஞானம் நிறைந்த ரிஷிகள், முனிவர்கள், தெய்வங்களை சம்ஸ்கிருத மொழியில் ஆராதித்தனர். இதனால், சம்ஸ்கிருத மொழிக்கு , தேவ நாகரி என்னும் பெயரும் உண்டு. அதாவது, தேவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் போது, அவர்கள் சமஸ்கிருதத்தில் உரையாடுகின்றனராம். இது எவ்வளவு ஆச்சரியமான மொழி !!! ஏன் சமஸ்கிருதத்தில் இறைவனுக்கான ஸ்தோத்திரப்பாடல்களை இயற்ற வேண்டும் ? இது ஒரு முக்கியமான கேள்வி !...

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நம் தெய்வங்களால் உரைக்கப்பட்ட வேதங்களின் பொருளை இன்றும் நாம் அர்த்தம் தெரிந்து கொள்கிறோம். அந்த சம்ஸ்கிருத மொழி ஸ்லோகங்களின் பொருள் இன்றும் மாறாமல் இருக்கிறதே ! சொன்னால் புரிகிறதே ! அது தான் அந்த மொழியின் விசேஷம். கருங்கல் மலை போன்ற உறுதியோடு, அந்த மொழியின் தன்மை கட்டுக்குலையாமல், எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மாறாதபடிக்கு , சாஸ்வதமாய் இருக்கிறதே ! இது ஒரு மிகப்பெரிய ஆச்சரியம். அம்மொழி இன்றைக்கும் பயன்படுத்தத்தக்கதாக இருக்கிறதென்றால், அந்த மொழியின் கட்டுமானம் அப்படி.

ஆங்கில மொழியின் வரலாறு :

ஆங்கில மொழியை எடுத்துக்கொள்ளுங்கள். ஆங்கிலத்திற்கு ஆதி வடிவம் கெல்டிக் (Celtic) மொழி. அதற்குப்பின்னால், ஆங்கிலோ--சாக்ஸன் (Anglo-Saxon) என்ற மொழி வடிவம் இருந்தது. அது இப்போது உள்ள பல்கலைக்கழக பண்டிதர்களைத்தவிர , ஒருவருக்கும் புரியாது. பழைய ஆங்கிலம் (Old English or Anglo-Saxon) என்பது கி. பி. 5 -ம் நூற்றாண்டின் மத்தியில் துவங்குகிறது. அதன் காலம் சுமார் 700 ஆண்டுகள். இதற்கு இன்னொரு பெயர் ஆங்கிலோ -- சாக்ஸன் என்பதாகும். பிறகு, இடைக்கால ஆங்கிலம் (Middle English) என்பது கி. பி. 1066 - முதல் துவங்கி 15 --ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை நீளுகிறது. எனினும், ஆங்கில

மொழியின் வரலாறு குறித்து துல்லியமான கால நிர்ணயங்கள் செய்ய இயலாது என்கிறார் ஆய்வாளர் ஜோனாதன் ஓவன்.

1400 --ம் ஆண்டு, பேசப்பட்ட மத்திய கால ஆங்கிலத்தை (Middle English) இன்றைக்கு உள்ள பிரித்தானிய மக்களால் புரிந்து கொள்ள முடியாது. ஏன் ? அந்த ஆங்கில மொழியின் தற்கால நவீன வடிவம் வந்தது 400 வருடங்களுக்கு முன்பு தான். இது தான் ,அந்த ஆங்கில மொழியின் லட்சணம்.

சமஸ்கிருதம் அநாதி :

ஆனால், சமஸ்கிருதம், கி. மு. காலத்தியது. ப்ரெடெரிக் மேக்ஸ் முல்லர் (Friedrich Max Müller **)** என்ற ஜெர்மன் அறிஞர், வேத காலம் என்பதை, தன்னுடைய சௌகரியத்துக்கு கி.மு. 1500 – என்று கணிக்கிறார் ப்ரெடெரிக் மாக்ஸ் முல்லர். ஒரு பிரித்தானியர்களின் பணியாளன் என்பதால், அவர் கொண்ட பார்வை. ஒரு மேற்கத்திய பார்வையை இருக்க வேண்டும். " வேதம் அநாதி" என்ற குறிப்பு, வேதம் என்பது காலத்தால் முற்பட்டது என்பதை நமக்குக்கோடிட்டுக்காட்டுகிறது. வேதம் என்பது, வாய்மொழியாய் சொல்லப்பட்டது. பிறகே, அது எழுத்து வடிவில் எழுதப்பட்டது. ஒலி வடிவில் வேதம் சொல்லப்பட்டதால், அதற்கு " ஸ்ருதி" என்ற பெயரும் உண்டு. இப்படி, வேதம் அநேக ஆயிரம் ஆண்டுகளாக வாய் மொழியாய் சொல்லப்பட்டுக்கொண்டு வந்தது எனும் போதே, அதன் பழமை நமக்குப்புரிகிறது. வேதமே இத்தனை ஆயிரம் ஆண்டுகளாய் சொல்லப்பட்டு வந்தது எனும் போது, அந்த வேதம் சொல்லப்பட்ட மொழியாகிய (medium) எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்க வேண்டும் ? இப்படி, ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் பழமை கொண்ட ஒரு மொழியைப்பார்த்து அது ஒரு " இறந்து போன மொழி" என்று சொல்வது மதியீனம்.

தாத்தா --பேரன் உறவு :

நமது வீட்டில், மிகவும் வயதான 98 -வயதான ஒரு பெரிய தாத்தா வீட்டின் திண்ணையில் அல்லது அறையில் வயோதிகத்தால் படுத்திருக்கிறார். அந்த வயது மூத்த பெரியவருடைய மகன், மகள், பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன், கொள்ளுப்பேத்தி, எள்ளுப்பேரன், எள்ளுப்பேத்தி வரை உயிரோடு இருப்பார்கள். வயதானவர் என்பதால், அவரை கணக்கில் சேர்க்காமல் விட முடியுமா ? அவரை , நாம் இறந்து போனவர் என்று சொல்வதில்லையே ? ! எத்தனை ஆண்டுகள் ஆனாலும், அவர் நம் மரியாதைக்குரிய மூத்தவர். அவர் நம் குடும்ப பிதாமகன் அல்லவா ? அது போலத்தான், சம்ஸ்கிருத மொழியும் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வந்து பிறகு, வயதான மொழியாகி விட்டது. சரி, இந்த சமஸ்கிருதம் இப்போது எந்த வடிவில் உள்ளது ? அதையும் சற்றே பார்ப்போம். பெரிய கொள்ளுத்தாத்தா காலத்துக்கு பின்பு, அவரது, கொள்ளுப்பேரன்கள் வரை எல்லோரும் ரொம்ப வளப்பமாகவே இருக்கின்றனர். ஆமாம். சமஸ்கிருதம் என்ற கொள்ளுத்தாத்தா பெற்ற பிள்ளைகள், ஹிந்தி, ஹிந்துஸ்தானி, பிஹாரி, ராஜஸ்தானி, குஜராத்தி, காஷ்மீரி, ஒரிய மொழி, பெங்காலி மற்றும் அநேக மொழிகள். இந்த மொழிகள் எல்லாமே சம்ஸ்கிருத தாத்தாவின் பேரப்பிள்ளைகள். இதற்கு என்ன ஆதாரம் ? அந்த வட இந்திய மொழிகள்

எழுதப்படும் லிபி, (script) அதாவது எழுத்து வடிவம் மற்றும் அந்த மொழிகளின் சொல் வளத்தைப்பார்த்தால் (vocabulary) அது பெரும்பாலும் சம்ஸ்கிருத மொழியின் வேர்ச்சொல்லைக்கொண்டிருக்கும்.

உதாரணத்துக்கு , வட இந்திய மொழிகளில் உள்ள எண்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஏகம் -- ஒன்று --ஏக். ; த்வம் -- டூ --தோ ; த்ரையம் -- மூன்று -- தீன் ; சதுர் ---நான்கு -- சார் ; பஞ்ச --ஐந்து -- பான்ச் ; இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். பெரும்பாலான வடஇந்திய மொழிகள், இந்த சம்ஸ்கிருத தாத்தாவின் பேரன், பேத்திகளே !

பிராகிருதம் என்ற மூல வடிவம் :

சமஸ்கிருதம், உண்மையில், பிராகிருதம் என்ற வேறொரு மொழியிலிருந்து வந்தது. சமஸ்கிருதத்தின் சித்தப்பா ஒருவர் இருக்கிறார். அவர் பாலி மொழியாவார். இந்த பாலி மொழி தான் , கவுதம புத்தர் பேசிய மொழியாகும். புத்தர் இயற்றிய நூல்கள் யாவும், இந்த பாலி மொழியில் உள்ளன. இது சமஸ்கிருதம் போன்றே அதன் அடிப்படை கொண்ட , அதற்கு நெருங்கிய மொழியாகும். பாலி மொழி , சமஸ்கிருதத்திற்கு நெருக்கமானது என்பதற்கு ஒரு சின்ன உதாரணம். " புத்தம் சரணம் கச்சாமி ! " (புத்தம் என்ற இறையை வணங்குகிறேன்.) 'சரணம்' என்றால், சமஸ்கிருதத்தில் 'கால்' என்று அர்த்தம். அதனால் தான் ஒருவரின் காலில் சாஷ்டாங்கமாக விழுவதற்கு ' சரணாகதி' என்று சொல்கிறோம். சமஸ்கிருதத்தில், ' கச்ச' என்றால் ' வணங்குவது'. ' ஆமி' என்றால் ' நான்'. 'கச்சாமி' என்றால், ' நான் வணங்குகிறேன்.' என்று அர்த்தம். ' புத்தம் சரணம் கச்சாமி.' என்றால் ' புத்தம் எனும் கடவுளை வணங்குகிறேன்,' இப்படி, பாலி மொழி வார்த்தைகளுக்கு அர்த்தம் தேட வேண்டியதில்லை. சம்ஸ்கிருத அர்த்தமே அதற்கும் அர்த்தமாகும்.

ஆதி செம்மொழிகள் மூன்று :

ஆதியில், உலகில் மூன்று செம்மொழிகள் இருந்தன. செம்மொழி என்பதற்கு நிறைய அளவுகோல்கள் வைத்துக்கொண்டாலும், அதற்கு உரிமை கோரி பல மொழிகள் இருந்தாலும், ஆதி செம்மொழிகள் என்று அடையாளம் காணப்படுபவை மூன்றே.. அவை, சமஸ்கிருதம், இலத்தீன், கிரேக்கம் ஆகியவை. இந்த மூன்று மொழிகளுக்கிடையே நெருங்கிய உறவு உண்டு. ஒரு மொழியில் உள்ள சொற்களைப்போலவே இன்னொரு மொழியிலும் இருக்கும். அவ்வளவு நெருங்கிய சொல் உறவு (Lingual proximity) லிங்குகள் ப்ரோக்ஸிமிட்டி) உண்டு. இதைப்பார்க்க பார்க்க அற்புதமாய் இருக்கும். உதாரணம் சில :

இலத்தீன் ---	**சமஸ்கிருதம்**	**ஆங்கிலம்**
1 praedictionem	pradeekshanam	prediction
2. serpent	sarpam	serpent
3. dei	deivam	divine

4. mas	manushyan	man
5. genum	janani (mother)	gene – genesis
6. annona	annam (food)	-------
7. patri	pitha	father

நிசியா விசுவாசப்பிரமாணம் :

கத்தோலிக்கர்களின் நிசியா விசுவாசப்பிரமாணம் (கி. பி. 325) என்பது இலத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது ஒரு கிறித்தவர் தன் விசுவாசத்தை பகிரங்கமாக சொல்லுதலாகும். இந்த இலத்தீன் மொழி அறிக்கையிடுதலை வாசித்துப்பார்த்தால், அது கிட்டத்தட்ட சாம வேதம் சொல்லும் போது ஏற்படும் ஸ்வர ஏற்ற, இரக்கம் போலவே உள்ளது. நிசியாவின் விசுவாசப் பிரமாணம் இலத்தீன் மொழியில் உள்ளது. ஆனால், இது எவ்வாறு சமஸ்கிருதத்தை ஒட்டியுள்ளது ? சமஸ்கிருதம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய ஆதி செம்மொழிகளுக்கிடையில் உள்ள நெருங்கிய தொடர்பு கி. மு. காலத்தியது.

நிசியாவின் விசுவாசப்பிரமாணம் (Nicene Creed of Faith) - Latin

Credo in unum Deum,

Patrem omnipoténtem,

Factórem cæli et terræ,

Visibílium ómnium et invisibílium.

Et in unum Dóminum Iesum Christum,

Fílium Dei Unigénitum,

Et ex Patre natum ante ómnia sǽcula.

Deum de Deo, lumen de lúmine, Deum verum de Deo vero,

Génitum, non factum, consubstantiálem Patri:

Per quem ómnia facta sunt…".

இந்த இலத்தீன் மொழியின் வரிகளை வாசித்துப்பார்த்தால், அது சாம வேதம் சொல்லும் போது ஏற்படும் ஸ்வர லயம் போலவே இசையின் ஏற்ற தாழ்வுகளோடு இருப்பதைக்காணலாம்.

மாறுபாடு அடைந்த ஆதி செம்மொழிகள் :

இலத்தீன் மொழி இன்றைக்கு சாமானியர்களின் பேச்சு வழக்கில் இல்லை. ஆனால், இலத்தீன் சொற்களைக்கொண்ட நவீன கால இத்தாலிய மொழி மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

கிரேக்க மொழியின் ஆதி வடிவம் இப்போது இல்லை. அதன் நவீன வடிவம் பயன்பாட்டில் உள்ளது. சமஸ்கிருதத்தை சாமானியர்கள் பயன்படுத்துவதில்லை. அதனால், அது வழக்கொழிந்த மொழி என்று சொல்லப்படுகிறது. இதில் உண்மையில்லை. அது சாமானியர்களின் அன்றாட தொடர்பு மொழியாக இல்லாது போனாலும், இறை வழிபாட்டு மொழியாக இருக்கிறதே ! அதை யாராலும் மறுக்க முடியாது. கோவிலுக்குச்சென்று அர்ச்சனை செய்பவர்கள், சம்ஸ்கிருத மொழியில் அர்ச்சனை செய்யுமாறு அங்குள்ள கோவில் குருக்களை கேட்டுக்கொள்கின்றனர். ஏன், சாமானியர்களும் சமஸ்கிருதம் தெய்வத்தின் மொழி என்று நினைப்பதால் தானே ! அத்தோடு, மந்திரங்களின் வலிமை , சமஸ்கிருதத்தில் அதிகமாக உள்ளது என எண்ணுவதால் தானே ! பகுத்தறிவாளர்கள் அதிக பக்தியோடு கோவிலுக்குச்சென்று வழிபாடு செய்யும் காலமிது !!

தேவ நாகரி வடிவில் உள்ளது. ஹிந்தி :

இந்தியாவெங்கும், ஏன், உலகமெங்கும் உள்ள கோவில்களில் , சமஸ்கிருதத்தில் அர்ச்சனை நடைபெறும் போது, அது அந்த மொழியின் அழியாத்தன்மைக்கு சான்றாக உள்ளதல்லவா ? ஹிந்தியும், ஹிந்துஸ்தானி மொழியும் இன்ன பிற வடஇந்திய மொழிகள் எல்லாமே , சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவை என்பதால், அவை இன்றைய நிலையில் வளர்ந்து நிற்பது , சமஸ்கிருதம் வேறொரு வடிவில் உள்ளதை பறைசாற்றிக்கொண்டிருக்கிறது. நாம் ஏற்கனவே சொன்னது போல, கொள்ளுத்தாத்தா காலமாகி விட்டார். ஆனால், அவரது பேரன், பேத்திகள் அவரது பேரைச்சொல்லும் சந்ததியராகி விட்டனர். வட இந்திய மொழிகளின் எழுத்து வடிவைப்பார்த்தால், அது தேவ நாகரி வடிவில் உள்ளது. ஹிந்தியும், ஹிந்துஸ்தானியும் தேவ நாகரி வடிவங்களே ! ஹிந்தி , ஹிந்துஸ்தானி , இரண்டுக்கும் வேற்றுமை உண்டு. ஹிந்தி என்பது அரசு அலுவல் ரீதியாக பயன்படுத்தும் மொழி வடிவம். ஹிந்துஸ்தானி என்பது மக்கள் பேசும் மொழி வடிவம். இரண்டுக்கும் சிறு வேற்றுமை உண்டு.

சமஸ்கிருதமும், தமிழும் :

சமஸ்கிருதமும், தமிழும் பிரிக்க முடியாதவை. இந்த இரு மொழிகளுக்கிடையே, வார்த்தைகளில், ஏகப்பட்ட கொடுக்கல், வாங்கல் நடந்து, நிறைய நூற்றாண்டுகள் கடந்து விட்டன. சம்ஸ்கிருத வார்த்தைகள் இன்றளவும் தமிழில் பயன்பாட்டில் உள்ளன. "சூரியன், காலம், சமுத்திரம், தினகரன், திவாகரன், குரு, வித்தியாலயம், சர்வம், அநேகம், சொர்ணம், பாஷை, அபராதம், உதயம், அஸ்தமனம்," என அநேக ஆயிரம் வார்த்தைகளைச் சொல்லலாம். சொல்லிக்கொண்டே போகலாம். தமிழுக்கும்,, சமஸ்கிருதத்துக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவைச்சொல்ல வந்த திருமங்கையாழ்வார், " தென்னன் தமிழை, வட மொழியை" என்கிறார். இது ஒன்றே இந்த இரு மொழிகளின் இணைபிரியாத்தன்மைக்கு சான்றாகும்.

காலத்தை வென்ற மொழியை காலாவதியான மொழி என்று சொல்வது அபாண்டம். உண்மையில், நம்மை விட சம்ஸ்கிருத மொழிப்பிரியர்களாக இருப்பவர்கள், ஜெர்மானியர்கள் மற்றும் சீனர்கள். சீனாவில் உள்ள பீக்கிங் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத மொழி ஆய்வு இருக்கை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு, சமஸ்கிருதமும், பாலி மொழியும் கற்பிக்கப்படுகிறது.

ஜெர்மானியர்களோ, தங்கள் ஜெர்மன் மொழிக்கும் , சமஸ்கிருதத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை உணர்ந்து (இரண்டுமே இந்தோ--ஆரிய மொழிகள் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.) சம்ஸ்கிருதத்தை கற்றுத்தேர்ந்து விட்டனர். அந்த நாட்டில் " பகுத்தறிவாளர்கள் , மதச்சார்பின்மை பேசுபவர்கள்" இல்லையென்பது இதிலிருந்தே தெரிய வருகிறது.

பிற மொழிகளில் சமஸ்கிருதத்தின் தாக்கம் :

ஆசியாவின் அநேக மொழிகளில் சமஸ்கிருதத்தின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. உதாரணத்துக்கு ஒரு சிலவற்றைக்கூறலாம். கன்னட, தெலுங்கு மொழிகளில் சமஸ்கிருதத்தை வார்த்தைகளின் கலப்பு உள்ளது. மலையாள மொழியில்,40 % சதவிகித சம்ஸ்கிருத வார்த்தைகள் இருப்பதை இன்றும் காணலாம். தங்கள் மொழியில் இருக்கும் சம்ஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்று வார்த்தைகளை தேடி, மலையாள அறிஞர்கள் அலையவில்லை. எந்த சம்ஸ்கிருத வார்த்தைகள் பயன்பாட்டில் உள்ளனவோ, அவைகளை அப்படியே மாறாமல் வைத்துள்ளனர். தொன்மையான விஷயங்களை மலையாளிகள் மதிக்கின்றனர். கேரளாவின் மாப்பிளா முஸ்லிம்கள் பேசும் மலையாளம், அப்படியே சமஸ்கிருதத்தின் அச்சு நகல் போலவே இருப்பதை காணலாம். சிங்கள மொழியில் 80 % சம்ஸ்கிருத வார்த்தைகள் இருப்பதாக தனது " டிஸ்கவரி ஆப் இந்தியா" புத்தகத்தில் , பண்டித ஜவஹர்லால் நேரு குறிப்பிடுகிறார். இப்படியாக, சம்ஸ்கிருத மொழியின் தாக்கம் ஏற்படாத மொழிகள் என்று ஒரு பட்டியல் இட்டால், அது மிகச்சிறியதாக இருக்கும்.

சமஸ்கிருதத்தை பேச்சு மொழியாகக்கொண்ட ஒரு கிராமம் :

இன்றைய இருபத்தொன்றாம் நூற்றாண்டு காலத்தில், தொழில் மயமான நவீன இந்தியாவில் இன்றும், ஒரு கிராமத்தில், அனைவருமே சமஸ்கிருதத்தில் தினசரி உரையாடிக் கொண்டிருக்கின்றனர் என்பது ஆச்சரியமான தகவல். ஆம், கர்நாடகாவில், ஷிமோகா மாவட்டத்தில், துங்க நதிக்கரை ஓரம் உள்ள மாத்தூர் என்ற கிராமத்தில், இன்னமும் அனைவருமே அன்றாட பேச்சு மொழியாக சமஸ்கிருதத்தில் பேசிக்கொண்டிருக்கின்றனர் என்பது சமஸ்கிருதம் இன்னமும் முற்றிலும் அழிந்துவிடவில்லை என்பதற்கு ஒரு சாட்சி.

சமஸ்கிருதம் , தேவ மொழி. அதை யாராலும் அழிக்க முடியாது. சமுத்திரத்தை யாரால், என்ன செய்ய இயலும் ? வங்காள விரிகுடாவை வெப்பமாக்கி, அதை ஆவியாக்கி, அந்த இடத்தை காலி மைதானமாக்குகிறேன் என்று ஒருவன் சொன்னால், அவனைப்பற்றி நாம் என்ன நினைப்போம் ? அதைப் போலத்தான், யாராவது ஒருவன், சமஸ்கிருத மொழியை அழித்துக்காட்டுகிறேன் என்று சொல்வதும்.

துணைக்குறிப்புகள் :

1. https://en.wikipedia.org/wiki/Max_M%C3%BCller

2. https://www.quora.com/What-is-the-approximate-date-of-compilation-of-Vedas-Upanishads-Puranas-Ramayana-and-Mahabharatha

3. https://en.wikipedia.org/wiki/Nicene_Creed

4. http://www.fanfoyan.com/sktstudies.htm

5. https://www.dailyo.in/arts/china-intellectuals-sanskrit-li-wei-ji-xianlin-hangzhou-buddhism-institute-peking-university-beida/story/1/6085.html

6. http://www.arrantpedantry.com/2014/12/01/celtic-and-the-history-of-the-english-language/

7. https://www.thebetterindia.com/65046/sanskrit-village-mattur-shimoga-karnataka/

8. . https://www.youtube.com/watch?v=PGf_6Mc9maE

திண்ணை



உங்கள் வீட்டில் திண்ணை இருக்கிறதா? அந்த திண்ணையில் உட்கார்ந்து அந்த மகோன்னதமான வசந்தத்தை அனுபவித்து இருக்கிறீர்களா?

“அண்ணன் எப்ப போவான் ? திண்ணை எப்ப காலியாகும்?’’ என்று கிராமங்களில் புழங்கும் இந்த சொலவடையே திண்ணைகளின் முக்கியத்துவத்தை சொல்கிறது.
ஆனால், இன்று திண்ணைகளே காலியாகி விட்டது என்பது தான் ஒரு வரலாற்று சோகம்.

வாசல் திண்ணை, நடை, ரேழி, தாவாரம், பாவுள், கூடம், கூடத்து உள், முத்தம், தொட்டி முத்தம், கொல்லை , ரெண்டாங்கட்டு, சமையல் உள், அங்கண அறை, கொல்லைத் தாழ்வாரம், கிணத்தடி, கோட்டை அடுப்பு, மாட்டு தொழுவம், தோட்டம், புழக்கடை … இப்படி பல்வேறு நிலைகளை கொண்டது அந்தக்கால கிராமத்து பாரம்பரிய வீடுகள். நம் கிராமத்து வீடுகளின் அழகே தனி.

ஓலைக்குடிசையின் ஒட்டுத்திண்ணை தொடங்கி, ஓங்கி உயர்ந்த மச்சு வீட்டின் வரவேற்புத் திண்ணை வரை அன்றைய மக்களின் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் நீக்கமற நிறைந்திருந்தன திண்ணைகள்.

இன்று திண்ணைகள் இருக்கும் இடத்தில் இரு சக்கர வாகனங்களும், நான்கு சக்கர வாகனங்களும், வாடகைக்கு கடைகளும் இருக்கின்றன. இப்போது எந்த வீட்டிற்கும் திண்ணைகள் இல்லை. மக்கள் மனதில் பரந்த எண்ணமும் ஈரமும் இல்லை.
பழைய காலத்தில் வீட்டின் இரு புறமும் திண்ணை வைத்து கட்டுவார்கள்.
வழிப்போக்கர்கள் தங்கவும், வீட்டுப் பெரியவர்கள் மாலை நேரத்தில் காற்று வாங்கவும் வசதியாக இருக்கும்.

அக்ரஹாரங்களின் அழகே திண்ணைகள் தான். வரிசையாக திண்ணையுடன் கூடிய வீடுகளும், தெருக்கோடியில் ஒரு அழகான கோவிலும் (பெரும்பாலும் கிருஷ்ணன் கோவில்கள் தான்) அழகோ அழகு. பின்னாடி பொறை.
கூட்டுக் குடும்பம் இல்லாமல் எப்படி நமது பண்பாடு சீர்கெட்டு விட்டதோ, அப்படியே திண்ணைகள் இல்லாமல் குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் அமைதி இல்லாமல் போய் விட்டது.

ஒற்றைத் திண்ணையை விட இரட்டைத் திண்ணையே விஷேசமானது. வீட்டுக்கு வருபவர்களை உட்கார வைத்துப் பேச வசதியாக இருக்கும். மாலையில் காற்று வாங்கவும், அருகில் வசிப்பவர்கள் கடந்து செல்லும் போது குசலம் விசாரிக்கவும், வீட்டுப் பெரியவர்கள் மாலை திண்ணையில் அமர்ந்து கதை பேசவும் திண்ணைகளின் பயன்பாடு அளப்பரியது.

எல்லா நேரமும் எல்லாத் திண்ணைகளும் ஏதோ ஒரு சேதியை சொல்லி கொண்டு தான் இருந்தன. அதில் அமர்ந்து தான் பாட்டிகள், பேரன் பேத்திகளுக்கு கதைகள் சொன்னார்கள். இளையவர்கள் பல்லாங்குழி விளையாடினார்கள். பெரியவர்கள் பரமபதம் ஆடினார்கள், அப்பாக்கள் அரசியல் பேசினார்கள். அம்மாக்கள் ஊர்க்கதை பேசினார்கள்.

புழக்கடை திண்ணையில் அமர்ந்து புது மணத்தம்பதியர் நிலாவை ரசித்தார்கள்.


எதிர் திண்ணைகளில் காதலர்கள் சமிக்ஞையில் காதலை வளர்த்தார்கள்.
திண்ணைகள் பள்ளிக்கூடமாகவும், அரசியல் மேடைகளாகவும், நடன அரங்கமாகவும், கலைக் கூடமாகவும், விளையாட்டு அரங்கமாகவும் தேவைக்கேற்ப மாறிக் கொள்ளும் இயல்புடையதாக இருந்தது.

சாணம் மணக்கும் ஏழை வீட்டுத் திண்ணை தொடங்கி, கிரானைட் கல் பதித்த பெரிய வீட்டு திண்ணை வரை - கல்வி, விளையாட்டு, ஆடல், பாடல், அரசியல், அனுபவம், பக்தி, பஞ்சாயத்து, கதை, நாடகம், காதல், காமம், மகிழ்ச்சி, சோகம், இளமை, முதுமை என்று நமது கலாச்சாரங்களை சொல்ல ஆயிரமாயிரம் விஷயங்கள் உண்டு, திண்ணைகளிடம்.

ஆனால், தற்காலத்தில் ஒருவரோடொருவர் பேசுவது என்பதே அரிதாகி விட்டது. கிராமப்புறங்களிலாவது அக்கறையுடன் குசலம், நலம் விசாரித்தல் இன்னும் நடைமுறையில் உள்ளது. ஆனால் நகர்ப்புறங்களில் ?? அதுவும் அடுக்கு மாடி குடியிருப்புகளில் மிகவும் மோசம்.

கிராமப்புறங்களில் சன்னதி தெருவின் அழகே அழகு. இப்போது அதுவும் கொஞ்சம் கொஞ்சமாகத் தொலைந்து வருகிறது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்து, அன்பைப் பரிமாறினாலே உலகில் பாதி நோய்கள் குறைந்து விடும்.
திண்ணைகள் வெறும் கல், சிமெண்ட், மணலால் ஆன கலவைகள் மட்டும் அல்ல.
திண்ணைகள் நமது பாரம்பரியம்.......!!

பழந்தமிழரின் மழை மானி



பழந்தமிழரின் மழைமானி எது ?

ஆட்டுக்கல் தான். அது வெறுமனே மாவு அரைப்பதற்கு மட்டுமல்ல ,அந்தக் காலத்தில் அது தான் மழை மானி. வீட்டு முற்றத்தில் தான் பெரும்பாலும் ஆட்டுக்கல் இருக்கும். முதல் நாள் இரவில் மழை பெய்திருந்தால் அதன் குழிக்குள் நீர் நிறைந்திருக்கும். அந்நீரை விரலால் அளந்து பார்த்து அது ஒருழவுக்கு ஏற்ற மழையா அல்லது ஈருழவுக்கு ஏற்ற மழையா என்பதை அறிந்து கொள்வர்.

மழைப்பொழிவின் பழைய கணக்கு முறை “செவி” அல்லது “பதினு” எனப்படும். இது 10 மி.மீ அல்லது 1 செ.மீட்டருக்கு சமமானது. மழையின் அளவுக்கும் நிலத்தின் ஈரப்பதத்துக்கும் தொடர்பு உண்டு. இதனை ‘பதினை’ என்றனர். அறிவியல் கணக்குபடி 18 மி.மீ வரை மழை பெய்தால் தான் அதை முறையாக மண் உறிஞ்சிடும். ஆக எத்தனை “பதினு” மழை பெய்திருக்கிறது எனத் தெரிந்து கொண்டு முதல் உழவுக்கு தயாராவார்கள்.

மழையின் வேறு பெயர்கள் :

மழைக்குப் பெய்திறனின் அடிப்படையில் தமிழில் பெயர் வைக்கப்பட்டிருந்தது.

“தூறல்” – பசும்புல் மட்டுமே நனைவது. விரைவில் உலர்ந்துவிடும்.

“சாரல்” – தரைக்குள் ஓரளவு நீர் செல்லும்.

“மழை” – ஓடையில் நீர்ப்பெருக்கு இருக்கும்.

“பெரு மழை” – நீர்நிலைகள் நிரம்பும்.

”அடை மழை” – ஐப்பசியில் பெய்வது

”கன மழை” – கார்த்திகையில் பெய்வது.

இதையே அறிவியல் வேறு வகையில் கூறுகிறது:

மழைத்துளியின் விட்டம் 0.5 மி.மீட்டருக்கு குறைவாக இருந்தால் அது தூறல்.

அதுவே விட்டம் 0.5 மி.மீட்டருக்கு மேல் இருந்தால் அது மழை. 4-6 மி.மீட்டருக்கு மேல் துளியின் விட்டம் இருக்குமானால் அது கனமழையாகும்.

மழையைப் பற்றித் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "மாறாநீர்" என குறிப்பிட்டிருக்கிறார். இந்த உலகம் தோன்றிய போது எவ்வளவு நீர் இருந்ததோ அதில் ஒரு துளிக்கூடக் குறையவும் இல்லை, கூடவும் இல்லை என்பதை நாம் ஏற்கனவே அறிந்தோம். அதாவது உலகில் இதுவரையுள்ள நீர், நிலையானது, அளவு மாறாதது என்கிறார்.

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

--- (குறள் 701)

இங்கு மாறாநீர் என்பது நீரின் தன்மையைக் குறிக்கும் எனச் சிலர் பொருள் கூறுவது பொருத்தமன்று என்று குறிப்பிடுவார். நிலத்திற்கு ஏற்ப நீரின் தன்மை மாறுபடும் என்பதை வள்ளுவரே பிறிதோர் குறளில் கூறியிருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

-- (குறள் 452)

எனவே வள்ளுவர் ‘மாறாநீர்’ எனக் குறிப்பிடுவது நீரின் அளவைத்தான் என்பது தெளிவாகிறது.

ஒரு உழவு மழை :

‘பொதுவாக ஊர்ப்புறங்களில் மிக அதிகமாக 5 செ.மீ அளவுக்கு மழை பெய்தால் ஒரு உழவு மழை என சொல்வது உண்டு. பூமியில் ஒரு அடி ஆழத்துக்குத் தண்ணீர் இறங்கியிருந்தால், அது

ஒரு உழவு மழை. ஓரிரு முறை நல்ல மழை பெய்தாலே இலகுவான மண்ணில் ஓர் அடி ஆழத்துக்குத் தண்ணீர் இறங்கியிருக்கும்.'

நிலத்தடி நீரைக் காப்பாற்ற பனை மரங்களை வெட்டுவதைத் தவிர்க்கவும்....

பனையை வெட்டினால் நதிகள் வறண்டு போகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நீர் மேலாண்மையில் நம் முன்னோர்கள் சிறந்து விளங்கினர்.

அவர்கள் அவர்களுடைய தேவைக்கு மட்டும் எந்தக் காரியத்தையும் செய்யவில்லை, அவர்களுடைய சந்ததிகள் இந்த பூவுலகில் வாழும் வரை பயன் பெற எண்ணியே அனைத்து காரியங்களையும் செய்தனர்.. அவர்கள் பல குளங்களை வெட்டினார்கள் என்று நம் அனைவருக்கும் தெரியும். ஆனால், குளங்கள் வெட்டப்படுவதால் மட்டும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விடாது..

இதனை உன்னிப்பாகக் கவனித்த அவர்கள் குளத்தை சுற்றியும் பல ஆயிரம் பனைமரங்களை நட்டு வளர்த்தனர். இதன் காரணம் என்னவென்றால் பனைமரத்தைத் தவிர அனைத்து மரங்களின் வேர்களும் பக்கவாட்டில் மட்டுமே பரவும் ஆனால் பனைமரம் மட்டும் செங்குத்தாக நிலத்தடி நீர் வழிப்பாதையை தேடிச்செல்லும். அதுமட்டுமில்லாமல் தனது வேரை குழாய் போன்று மாற்றி தரைப் பகுதியில் உள்ள நீரை நிலத்தடி நீர்ப்பாதைக்கு கொண்டு செல்லும்.

இதனால் அனைத்து நிலத்தடி நீர் வழிப்பாதையிலும் நீர் நிரம்பி, அது ஊற்றாக அருகில் உள்ள ஆறுகளில் மட்டுமில்லாமல், பல நூறு மைல்கள் அப்பால் உள்ள ஆறுகளிலும் பெருக்கெடுத்து வற்றாத ஜிவ நதியாக ஓட வழி வகை செய்யும்...

இந்தப் பனைமரங்களை வெட்ட வெட்ட, ஒவ்வொரு நதியாக வறண்டு கொண்டே வரும் என்பது மட்டும் உண்மை.

உ. வே. சாமிநாதையரின் சங்கடங்கள்

(ஓர் உண்மையான “தமிழினத்தலைவரின்” வரலாறு)

-- கிருஷ்ணன் சங்கரன்

சென்னை.



‘கார்பொரேட் செக்யூரிட்டி’ யில் IDD (Inadvertant Data Disclosure) என்றொரு கருதுகோள் உண்டு அதாவது ஊழியர் தன்னை அறியாது பெறுபவருக்கு அவருக்குச் சம்பந்தமில்லாத . விஷயங்களை தவறுதலாக மின்னஞ்சல் செய்து விட்டால், கடைபிடிக்க வேண்டியவை என்று தனியாக ஒரு பட்டியல் உண்டுஊழியரின் .முதலில் மேலாளருக்குத் தெரியப்படுத்தவேண்டும் . சாமிநாதையர் .கையறு நிலையை விளக்க வேறு பொருத்தமான சந்தர்ப்பம் தேவையில்லை கிட்டத்தட்ட இதே போன்ற ஓர் இக்கட்டில் மாட்டிக்கொள்கிறார்சிந்தாமணியைப் பதிப்பிக்கும் . நோக்கத்தோடு இருந்த கும்பகோணத்தைச் சேர்ந்த வக்கீல், இலங்கையைச் சேர்ந்த சிதாமோதரம் பிள்ளைக்கு சாமிநாதையரிடம் இருக்கும் சிந்தாமணியின் விசேஷமான .வை. .உரையின் மீது ஒரு கண் இருவரும் அவ்வப்போது சந்தித்துப் பேசுவது வழக்கம்ஒரு நாள் . நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு கிளம்பும் போது சிந்தாமணியைத் தான் பதிப்பிக்க

விரும்புவதைக் கூறி, பதிப்பிக்கும் வேலை எத்தனை இடர்பாடுகள் நிறைந்தது, அதைப் பதிப்பிப்பதற்கான ஐயரின் அனுபவக் குறைவு, தன்னுடைய அனுபவம், சாமிநாதையர் ஏன் கம்பராமாயணத்தை பதிப்பிக்கக் கூடாது, பதிப்பித்தால் அதற்குத் தான் செய்யப்போகும் உதவிகள், சிந்தாமணிப் பதிப்பில் தான் பதிப்பித்தால் ஐயரின் பெயரைத் தகுந்த முறையில் சிறப்பித்து எழுதுதல் என்று பலவாறாக வாதிடுகிறார்சாமிநாதையரும் பலவாறாக மன்றாடி ., வாதிட்டு, மறுத்துப் பார்க்கிறார் கடைசியாக ."என் தந்தை வெளியே சென்றிருக்கிறார் . வந்தவுடன் கேட்டுக்கொண்டு நாளைக்காலை பதிப்பு விஷயமாக என் கருத்தைத் தெரிவிக்கிறேன்" என்கிறார் ."எனக்குச் சாதகமாகவே பரிசீலிப்பீர்கள் என்று கருதுகிறேன் . எதற்கும் அந்தப் பிரதியைக் கொடுங்கள், பார்த்து வைக்கிறேன்" என்கிறார் பிள்ளை . சாமிநாதையருக்கோ பிரதியைக் கொடுக்கப் பிரியமில்லை, ஆனால் மறுக்கவும் முடியவில்லை.   பொற்கொல்லர் நகை செய்வது போல, பல்வேறு ஜைன அறிஞர்களையும் சந்தித்து, உரையாடி, அரும்பாடுபட்டு, தான் வருடக்கணக்காக உழைத்துச் செய்த சிந்தாமணியின் கையெழுத்துப் பிரதியை சிதாமோதரம்பிள்ளையிடம் மிகுந்த .வை. .தயக்கத்துக்குப் பிறகு தூக்கிக் கொடுத்து விடுகிறார் சாமிநாதையர் வெளியே சென்றிருந்த தந்தை வந்தவுடன் இவருடைய முக வாட்டத்தைக் கண்டு என்னவென்று விசாரிக்கும் போது நடந்ததைச் சொல்கிறார் ."அடடா, அவசரப்பட்டுக் கொடுத்திருக்க வேண்டாமேநீ உயிரைக் . கொடுத்து உழைத்திருக்க, எதற்காக இன்னொருவர் பதிப்பிக்க வேண்டும்நாளைக் காலை . போய் வாங்கி வந்துவிடு" என்கிறார்தூக்கம் வராமல் வெறுமனே படுத்துக் . கொண்டிருந்தவர் காலையில் தம்பியுடன் தாமோதரம் பிள்ளையின் வீட்டை அடைந்து திண்ணையில் காத்திருக்கிறார்உள்ளிருந்து வந்த தாமோதரம் பிள்ளை ., வந்ததும் வராததுமாக இவர் கையில் சிந்தாமணி பிரதியைக் கொடுத்து, வரிசையாகச் சந்தேகங்களைக் கேட்க ஆரம்பிக்கிறார் . சாமிநாதையரும் எல்லா சந்தேகங்களையும் தீர்த்து வைத்தபின் கூறுகிறார், "இதுவரை நீங்கள் கேட்டதெல்லாம் சாதாரண சந்தேகங்கள்நூலின் கடினமான பகுதிகளெல்லாம் . .அவைகளைப் புரிந்து கொள்ளும் வசதி உங்களுக்கில்லை .இனிமேல்தான் இருக்கின்றன இப்பிரதியில் உள்ள கோடுகளும், புள்ளிகளும் எனக்கு உணர்த்தும் குறிப்புகளே வேறுநீங்கள் . எங்ஙனம் அவற்றை உணர்ந்து கொள்ள முடியும்? எனவே, இந்நூலை நானே பதிப்பிப்பேன்; ஒரு வேளை நீங்கள் பதிப்பித்தாலும்கூட என் முயற்சியில் மாற்றமில்லை." சொல்லி விட்டாரே ஒழிய, பதிப்பு வேலையை மேற்கொள்வதற்குத்தான் எத்தனை தடைகள்?

"உங்கள் ஆசிரியரே முடியாமல் விட்ட வேலையாயிற்றே, நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள், பாவம்?" "ஆறுமுக நாவலர், போப் துரை, ட்ரூ பாதிரியார் என்று பலரும் பாதியில் விட்ட வேலையாயிற்றே, உங்களுக்கு ஏன் வீண்சிரமம்?" என்று பலவாறாகக் கரிசனப்பட்டார்கள் . இவரோ"இத்தனை பேர் முயற்சித்ததினாலேயே அந்தப் படைப்பின் உன்னதம் தெரியவரவில்லையா? அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது நம்முடைய கடமையில்லையா? ஏதோ என் சிற்றறிவுக்கு எட்டியவரை நான் முயற்சிக்கிறேன்பின்னால் . வருபவர்கள் செம்மைப் படுத்திக்கொள்வார்கள்" என்று பதிலுரைத்தார். "அதுதான் தாமோதரம்பிள்ளை பதிப்பிக்கும் முயற்சியில் இருக்கிறாரே, நீங்கள் வேறு ஏன் சிரமப்படுகிறீர்கள்?" என்று பின்னாளில் கேட்ட சேலம் இராமசாமி முதலியார் மற்றும்

திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணியதேசிகருக்கும் இதே பதிலையே கூறினார் .

சிந்தாமணிக்குள் சாமிநாதையர் வந்ததே சுவையான கதைசாமிநாதையரிடம் ., கும்பகோணத்திற்கு முன்சீப்பாக வந்த சேலம் இராமசாமி முதலியாரை மரியாதை நிமித்தம் சந்திக்கச் சொல்கிறார் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் . கும்பகோணம் கல்லூரி தமிழ்ப் பண்டிதர், மடத்தைச் சேர்ந்த வித்துவான் என்று அறிமுகம் செய்துகொள்கிறார் ஐயர் .முதலியாரிடம் எந்தச் சலனமும் தெரியவில்லை .“நீங்கள் யாரிடம் பாடம் கேட்டீர்கள்?” என்று கேட்க “மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை” என்று பதிலிறுக்கிறார் ஐயர்அப்போதும் முதலியார் அமைதியாக இருந்ததைக் கண்ட ஐயர் ., “சரி தான், தமிழ் வாசனையே இல்லை போலிருக்கிறது,” என்று முடிவு செய்கிறார் .“என்னென்ன பாடம் கேட்டிருக்கிறீர்கள்?” என்று அவர் கேட்க ஐயருக்குக் கொஞ்சம் தெம்பு வருகிறது . “இப்போது பாருங்கள்,” என்பது போலக் “குடந்தை அந்தாதி, மறைசையந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அழகரந்தாதி , கம்பரந்தாதி, முல்லையந்தாதி, மீனாட்சி பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை ...” என்று மூச்சுத் திணறப் படித்த நூல்களை வரிசையாக அடுக்கிடுகிறார்அந்தாதி ., கலம்பகம், கோவை, பிள்ளைத் தமிழ், உலா போன்றவற்றில் தலைக்கு இருபது நூல்களைச் சொல்லியும் அசையாமல் கேட்டுக்கொண்டிருக்கிறார் முதலியார்அதற்கு மேலும் ., “இதையெல்லாம் படித்து என்ன பிரயோசனம்?” என்று முதலியார் கேட்க, “சரிதான், ஆங்கில மோகம் உள்ள மனிதர் போல . நல்ல ஆளிடம் வந்து மாட்டினோம்” என்று நினைத்துக்கொள்கிறார் ஐயர்அப்போது . தான் ஞாபகத்திற்கு வருகிறது, அடடா, புராணங்களை மறந்துவிட்டோமே? என்று, “திருவிளையாடற் புராணம், திருநாகைக்காரோணப் புராணம், மாயூரப் புராணம், கந்த புராணம், பெரியபுராணம், குற்றாலப் புராணம் ...,” ம்ஹூம்... கற்சிலையில் எந்த அசைவுமில்லைஐயர் . .நம்பிக்கை இழக்கவில்லை“நைடதம், பிரபுங்கலீலை, சிவஞான போதம், சிவஞான சித்தியார் உரை....” அடடா, முக்கியமானதை விட்டுவிட்டோமே,?’ “கம்பராமாயணம் முழுவதும் இரண்டு மூன்று முறை படித்திருக்கிறேன்பிள்ளையவர்களிடம் சில காண்டங்களைப் பாடமும் . கேட்டிருக்கிறேன்” என்று முடித்து முதலியாரை நம்பிக்கையோடு பார்த்திருக்கிறார் ஐயர் . .முதலியாரிடம் ஓர் அசைவு தெரிகிறது“இந்தப் பிற்காலத்து நூல்கள் எல்லாம் படித்தது சரிதான்பழையநூல்களில் ஏதாவது படித்ததுண்டா .?” என்று முதலியார் கேட்க, “சரிதான் . கம்பராமாயணத்திலுமா இவ்வளவு அசட்டை, கந்தபுராணம், பெரியபுராணம் எல்லாம் பழைய நூல்கள்தானே?” என்று நினைத்துக்கொண்டு “நான் சொன்னவற்றுள் எத்தனையோ பழைய நூல்கள் இருக்கின்றனவே?” என்கிறார் ஐயர் .“இதற்கெல்லாம் மூல நூல்களைப் படித்திருக்கிறீர்களா?” என்று முதலியார் கேட்டபின்புதான், “சரி,மனிதரிடம் ஏதோ சரக்கிருக்கிறது” என்று நினைத்துக் கொண்டு “தாங்கள் எந்த நூல்களைச் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லையே?” என்கிறார் ஐயர் .“சீவகசிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா?” என்று கேள்விகளால் தாக்குகிறார் முதலியார். படித்ததென்ன, பார்த்ததுகூட இல்லைஅவருடைய . அன்றைய தமிழ் நூல்பரப்பிலேயே இந்த நூல்கள் .ஆசிரியரும்கூடப் பார்த்ததில்லை

முதலியாரிடம் இருந்த சிந்தாமணிப் பிரதியும் ஏட்டிலிருந்து காகிதத்தில் பிரதி .கிடையாது
.எடுத்த பழைய பிரதி“நான் புஸ்தகம் தருகிறேன்மிகச் சிறந்த . புஸ்தகம் .
இதைப் படித்துப் .கம்பராமாயணத்தின் காவிய கதிக்கெல்லாம் இந்தக் காவியமே வழிகாட்டி
பொருள் செய்துகொண்டு பாடம் சொல்வீர்களானால் உங்களுக்கும் நல்லது, எனக்கும்
இன்பமுண்டாகும்படித்துப் பாடம் சொல்வீர்களா .?” என்று முதலியார் கேட்க, “அதில் சிறிதும்
சந்தேகமில்லைநிச்சயமாகச் சொல்கிறேன் .” என்று ஐயர் கூற, “சரி சிந்தாமணியை எடுத்து
வைக்கிறேன்அடிக்கடி இப்படியே வாருங்கள் .” என்று விடை கொடுக்கிறார் முதலியார் .
.சிந்தாமணிப்பாடம் தொடர்ந்து நடைபெறுகிறது

பிரதியின் போதாமைகள் படிக்கப் படிக்கத் தெரியவர அடுத்தடுத்த பிரதிகளைத் தேடி
ஓடுகிறார் ஐயர்திருவாவடுதுறை மடம் ., திருப்பனந்தாள் மடம் போன்ற மடங்களிலிருந்து
சோழ, பாண்டிய நாடுகளின் குக்கிராமங்களில் உள்ள கவிராயர் வீடுகள் வரை ஏட்டுச்
சுவடிகளைத் தேடி அலைகிறார்புத்தகப் புழு) ஏடுகள் என்றால் ராமபாணம் அரித்த ., ராமரின்
அம்பைப் போன்ற தோற்றத்தில் இருப்பதால் ராமபாணம்(, தொட்டால் பொடிப்பொடியாய்
உதிரும் நூறு வருடத்துப் பழைய ஓலைச் சுவடிகள்அதைப் போற்றிப் பாதுகாத்த .
அடுத்த தலைமுறையினர் அதன் அருமை .கவிராயர்கள் மண் மறைந்துவிட்டார்கள்
தெரியாமல், “ஆகமத்தில் சொன்னபடி ஆகுதி செய்துவிட்டோம்” என்று தீயிலிட்டு
எரித்தவர்கள் பாதி, ஆற்றிலே விட்டவர்கள் மீதி .“அடடா, அப்போது ஆகுதி செய்யவேண்டியது
அந்த ஆகமத்தையல்லவா?” என்று மனம் நோகிறார் ஐயர்அவைகளாவது முழுதாய்க் .
கிடைக்கிறதா? சோழ நாட்டில் ஒரு ஏடு கிடைத்தால், அதன் தொடர்ச்சி திருநெல்வேலிக்கருகே
ஒரு கிராமத்தில் கிடைக்கிறதுபல ஏடுகள் தற்போது வழங்கிவரும் தமிழ் எழுத்துக்களுக்கு .
இது .மற்றவையிலும் பிழை மலிந்தவையே அதிகம் .முந்தைய வட்டெழுத்துக்கள் கொண்டவை
கொம்பு, இது சுழி என்று பிரித்தறிய முடியாது .ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது .
சரபம் சாபமாகவும், சாபம் சரபமாகவும் தோன்றும்தரனென்பது தானென்றும் ., தானென்பது
தரனென்றும்.நாகம் நரகமாகத் தோன்றுகிறது . மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியே கிடையாது .
எழுத்துப்பிழை, இலக்கணப் பிழை ஒரு பக்கமென்றால் தகவல் பிழை இன்னொரு பக்கம் .
ஓரிடத்தில்“புனலாட்டிலே உயிர் போகிற ஞமலிக்கு தானும் வருந்திப் பஞ்சாட்சரமாகிய
மந்திரத்தைக் கொடுத்த படியும்” என்று வருகிறதுஜைன நூலில் பஞ்சாட்சரமா .? என்று
ஆராய்ந்தால் வேறோர் உரையில் ‘பஞ்சநமஸ்கார மந்திரம்’ என்று இருக்கிறதுஜைன .
நண்பர்களை விசாரித்த போது இரண்டாவதே சரியென்று தெரிகிறதுஉரை எழுதிய சைவர் .
பஞ்சாட்சரம் என்று மாற்றிக்கொண்டு விட்டார்இதுபோக வல்லின ., மெல்லின, இடையின
பேதம் தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள், உரை எது, மூலம் எது, மேற்கோள் எது என்று
தெரியாமல் முட்டி நின்ற இடங்கள் என்று எத்தனையோஅதிலும் நச்சினார்க்கினியர் .
உரையில் மேற்கோள் காட்டும் போது இன்ன நூல் என்று கூறாமல் “என்றார் பிறரும்” என்று
முடித்து விடுகிறார் அந்தப் பிறர் யார் என்று கண்டுபிடிக்க ஐயர் .‘ஷெர்லாக் ஹோல்ம்ஸ்’ ஆக
மாற வேண்டியிருக்கிறதுஇது போன்ற தடுக்கிடல்கள் தன்னை மேலும் மேலும் .
சீவகசிந .உத்வேகப்படுத்தவே செய்தன என்கிறார் சாமிநாதையர்ிதாமணி சமண நூல் .
எனவே, சமண அறிஞர்களோடு தொடர்ந்த உரையாடலில் ஈடுபடுகிறார்ஐயருடைய .
.அறிவுப்புலம் விரிந்துபோய் விடுகிறது பாட பேதக் கடலில் திளைத்து, மூழ்கி சீவக

சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் என்று முத்துக்களைக் கோர்த்துத் தமிழன்னையின் ஆரத்திற்கு அழகு சேர்க்கிறார் சாமிநாதையர். மணியைத் தேடிச் சென்ற ஐயருக்கு பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற மாணிக்கங்களும் அகப்படுகின்றன.

வார நாள்களில் கும்பகோணத்தில் கல்லூரி வேலை, விடுமுறை நாள்களில் சென்னையில் பதிப்பக வேலை, இதற்கு நடுவே புரவலர்களிடமிருந்து நூல் பதிப்பிக்கப் பணம் திரட்டும் வேலை என்று ஓய்வில்லாது உழைத்துக் கொண்டிருக்கிறார் சாமிநாதையர்இதற்கு நடுவே ., இன்றைக்கு முக நூலில் பெரும் உற்சாகத்தோடு இயங்கிவரும் வீணர்களின் மூதாதையர்கள் அன்று 'குடந்தை மித்ரன்' என்ற பத்திரிகையில் இவரைப்பற்றி "ஓஹோபணம் சம்பாதிக்க .. இதுவும் வழ ி போலும்?" என்று அவதூறு பரப்பினார்கள்அதைப் பார்த்ததும் பதிப்பிற்காக நிதி . சேகரிப்பதையும் நிறுத்தி விடுகிறார் சாமிநாதையர். அவ்வாறு எழுதியவர்களுக்கு ஒரு மறுப்புக் கடிதம் எழுதி எடுத்துக்கொண்டு தன்னுடைய வழிகாட்டியும், நண்பருமான சாது சேஷையரைக் காணச் செல்கிறார்கடிதத்தைப் படித்துப் பார்த்த சாது சேஷையர் . திகைத்துப் பார்த்துக் .கடிதத்தைக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டு விடுகிறார் கொண்டிருந்த ஐயரைப் பார்த்து அவர் கூறுகிறார், "நான் கிழித்துப் போட்டதைப் பற்றி வருத்தப்பட வேண்டாம்சிலர் உங்களை தூஷித்துக்கொண்டு திரி .வதும், கண்டனங்கள் செய்வதும் எங்களுக்குத் தெரிந்ததேஅவர்கள் செயலால் என்னைப் போன்றவர்களுக்கோ ., மாணாக்கர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உங்கள் மீது ஏதாவது மனவேறுபாடு ஏற்பட்டிருக்கிறதா? சிறிதும் கிடையாது .இதைக் குறித்து மேலே பேச வேண்டியதில்லை . இதற்கு நீங்கள் பதில் எழ ுதினால் உங்கள் எதிரிகளின் பெயர் பிரகாசப்படும்பதில் மறுப்பு . நல்ல காரியத்திற்கு நானூறு .நீங்கள் மறுப்புக்கு மறுப்பு எழுதுவீர்கள் .எழுதுவார்கள் சீமையிலும் இப்படி வீண் காரியங்கள் .விக்கினங்கள் வருவது உலக வழக்கம் அவற்றைத் தக்கவர்கள் மதிப்பதில .நடைபெறுவதுண்டு ்லைஉங்கள் பொன்னான நேரத்தை . இது போன்ற தூஷணைகளுக்கு பதில் .இப்படிக் காரியங்களில் வீணடிக்க வேண்டாம் எழுதுவதில்லை என்று வாக்குறுதி அளியுங்கள்," என்று .

வாசலுக்கும் சமையலுள்ளுக்கும் ஓடி பாட்டனாரின் கத்தரிக்காய் கூட்டு, சமையலறை உத்தரவுகளைத் தாய்க்கு அறிவிக்கும் 'கத்தரிக்காய் தொகையல்' சாமா, தன் மூதாதையின் நினைவாக குளக்கரையில் இருக்கும் 'சோனன் பாட்டா கல்' லை ஒல்லியான) நடுகல்லைப் போல வணங்கும் சாமிநாதையர் (கொள்ளுத்தாத்தா துவைத்த கல், பல நாள்கள் வெளியூரில் கதாகாலட்சேபம் செய்து விட்டு திரும்ப வரும் மகனைத் தெருமுக்கிலே கண்டவுடன் "உன் அப்பா வந்து விட்டான்," என்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் சாமிநாதையரின் பாட்டனார், ஒரு கைப்பிடி அரிசிக்கும் ஒரு வாழைக்காய்க்கும் பாடம் சொன்ன திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள், எண்ணெய் தீர்ந்து போனது தெரியாமல் ஆசிரியர் எண்ணெய் தேய்த்துக்கொள்ள உட்கார்ந்திருக்க, யாருக்கும் தெரியாமல் கடைக்கு ஓடி எண்ணெய் வாங்கி வைக்கும் சாமிநாதையர், தன் மாணாக்கனை கௌரவப்படுத்துமுகமாக சாமிநாதையரிடம் பணம் கொடுத்து நண்பர் வீட்டுக் கல்யாணத்தில் ஆடும் தாசிக்குக் கொடுக்கச் செய்யும் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆசிரியர் தன் பெயரை சிவகுருநாத பிள்ளை என்று பெயரை மாற்றியவுடன் 'நான் சைவனாகி

விட்டேன்' என்று ஆனந்தக் கூத்தாடும் கிறித்துவ நண்பர் சவேரிநாத பிள்ளை, ஆசை நாயகியுடன் இருக்கும் பண்ணையாரை மகிழ்விக்க திண்ணையிலிருந்து கான மழை பொழியும் 'குஞ்சு' பாரதி, திருவாவடுதுறை மடத்திற்கு வருகை தரும் வித்துவான்கள், அவர்தம் பழக்க வழக்கங்கள், அங்கு நடைபெற்ற சங்கீத வினிகைகள் என்று நம்மைக் கால இயந்திரத்தில் ஏற்றி ஒரு நூற்றைம்பது வருடங்கள் பின்னால் கொண்டு போய் விடுகிறது மகாமகோபாத்யாய டாக்டர் உச .வே.ாமிநாதையரின் 'என் சரித்திரம்'. எழுத்தாளர் கல்கி மற்றும் ரசிகமணி டிசி போன்ற பலரின் தொடர்ந்த வற்புறுத்தலுக்குப் பிறகே .கே. எழுத எழுத ஆனந்த .சாமிநாதையர் இந்நூலை எழுதுகிறார் விகடனில் தொடராக வருகிறது . ஆனால், ஐயர் கும்பகோணத்திலிருந்து சென்னை குடியேறுவதற்கு முன்பே முடிவுக்கு வந்து விடுகிறது, சாமிநாதையரின் மரணத்தின் காரணமாகதன் வரலாற்று நூல்கள் பதிவாகும் . போது ஊடு பாவாக வேறு சில வரலாறுகளும் பதிவாவது இயல்பாக நடப்பதுசாமிநாதையர் . கனம் .தான் பார்த்துப் பழகிய பல பெரிய மனிதர்களின் வரலாறுகளையும் எழுதியுள்ளார் கிருஷ்ணய்யரं, கோபாலகிருஷ்ண பாரதி, மகா வைத்தியநாதய்யர் போன்றோரின் வரலாறுகளையும்)'சங்கீத மும்மணிகள்' என்ற நூலாக இப்போது கிடைக்கிறது(, தன் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பெரும் தமிழ்ப் பண்டிதரும் தன்னுடைய வழிகாட்டியுமாக விளங்கிய தியாகராச செட்டியார் ஆகியோரின் வரலாற்றை தனித்தனி நூல்களாகவும் எழுதியுள்ளார்இந்த எல்லா நூல்களினூடும் திருவாவாடுதுறை மடத்தின் . அதன் .வரலாறு மற்றும் அதன் தமிழ்ப்பணி சிறப்பாகப் பதியப் பெற்றிருக்கிறது மடாதிபதிகள் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகர், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் போன்றோர் சாமிநாதையரின் தமிழ்ப் பணிக்கு பக்க பலமாக இருந்து பல வகையிலும் உதவி செய்தது 'என் சரித்திர'த்தில் பதிவாகியிருக்கிறது.

ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள புதுக்கோட்டைக்கு அருகே உள்ள குடுமியான் மலைக்குச் சென்ற சாமிநாதையர் "இந்த ஊரில் தாசிகள் இருக்கிறார்களா?" என்று விசாரிக்கிறார் . இருக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் இருப்பதிலேயே வயதான தாசியை அழைத்து வரச் கூட இருப்பவர்கள் ஒருவரை ஒருவர் சந்தேகத்தோடு பார்த்துக்கொண்டு .சொல்கிறார், தயக்கத்தோடு இருப்பதிலேயே வயதான தாசியை அழைத்து வருகிறார்கள்ஐயர் அந்தப் . பெண்ணிடம்" நீ தட்டெடுத்திருக்கிறாயா?" என்று கேட்கிறார்தட்டெடுத்தல் என்பது சுவாமி . ஊர்வலத்தின்போது சுவாமிக்கான அலங்காரப் பொருட்களைச் சுமந்து செல்லுதல், அதைப் பாரம்பரியமாக தாசிகள் மட்டுமே செய்வது வழக்கம் ."அப்போது பாடுகிற பாடல்கள் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்கிறார்அந்தப் பெண் சிறு வயதில் பாடிய பாடல்களை . .ஐயர் குறிப்பெடுத்துக் கொள்கிறார் .ஞாபகத்திலிருந்து ஒவ்வொன்றாகப் பாடுகிறாள் சிவாலயங்களில் இருக்கும் ருத்ர கணிகையர் தட்டெடுக்கும் போது பாடும் பாடல்களில் தல சம்பந்தமான செய்திகள் இருக்கும் என்பது அந்தத் தமிழ்த் தேனிக்குத் தெரிந்திருந்தது.

ஐயரின் தமிழ்ப்பணிக்கு உதவுமுகமாக ராமநாதபுரம் சேதுபதி மன்னர் சாமிநாதையருக்கு ஒரு கிராமத்தையே மானியமாக அளிக்க விழைந்த போது சமஸ்தானத்தின் மோசமான நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு அதை மறுத்து விட்டார் சாமிநாதையர்இந்த இரண்டு . நிகழ்ச்சிகளையும்'என் சரித்திர'த்தின் தொடர்ச்சியாகத் தாம் எழுதிய 'என் ஆசிரியப்பிரான்'

என்ற நூலில் குறிப்பிடுகிறார் கி.ஜ.வா. அதே போல் நூல்களைப் பதிப்பிக்க இவர் படுகிற பாட்டைப் பார்த்த திருவாவடுதுறை மடத்தலைவர் இவருக்காக அச்சுக்கூடம் அமைக்க ஐயாயிரம் ரூபாய் அளிக்கிறார்தான் ஏற்றுக்கொண்டால் அச்சகத்தின் வரவு செலவைக் . கவனிக்கவே பொழுது சரியாகயிருக்கும் என்றும், அது தன் ஏடு சேகரிப்பு மற்றும் தமிழ் ஆய்வுப் பணிக்கு பெரும் இடையூறாகவே இருக்கும் என்று அதனை அன்போடு மறுத்து விடுகிறார் சாமிநாதையர்.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மூத்த மாணவரும், சாமிநாதையரின் முன்னோடியும் வழிகாட்டியுமான தியாகராச செட்டியாரை சிந்தாமணி பதிப்பித்ததற்குப்பின் காணச் செல்கிறார் சாமிநாதையர்இவர் . தான் தான் பார்த்து வந்த கும்பகோணம் கல்லூரி ஆசிரியர் வேலையைச் சாமிநாதையருக்குத் தன் ஓய்வுக்குப்பின் ஏற்பாடு செய்து வைத்தவர் . எப்போதும் இவரை மரியாதையோடு அழைக்கும் செட்டியார் உணர்ச்சி மேலீட்டால்“எவ்வளவு பெரிய காரியம் செய்து விட்டாய்?” என்று ஒருமையில் அழைத்துப் பாராட்டித் தள்ளிவிடுகிறார்அதே . சமயம் இவரிடம் ‘என்ன, முன்னுரையில் ஒரு வார்த்தை என்னைப் பற்றி சொல்லியிருக்கலாம்’ என்று பேச்சு வாக்கில் கூறிவிடுகிறார்பெரும் . தான் .மனவருத்தமடைந்த ஐயர் தன் தவறுக்கு மூன்று விதமாகக் கழுவாய் தேடிக்கொள்கிறார் பதிப்பித்த ஐங்குறுநூறு நூலைத் தியாகராச செட்டியாருக்குச் சமர்ப்பணம் செய்கிறார்பின் . செட்டியாரின் நினைவாகக் கும்பகோணம் கல்லூரியில் ஆண்டுதோறும் ஒரு மாணவருக்கு உபகாரச் சம்பளமாக ரூ48 வழங்க ஏற்பாடு செய்கிறார்மூன்றாவதாக சென்னை .) திருவேட்டீஸ்வரத்தில்திருவல்லிக்கேணி (தான் கட்டிய வீட்டிற்கு ‘தியாகராச விலாசம்’ என்று பெயர் சூட்டுகிறார்ஐயரின் ஒரே வருத்தம் ., இதையெல்லாம் செட்டியார் உயிரோடு இருக்கும்போது செய்யவில்லையே என்பது தான்.

சில வருடங்களுக்கு முன் நூறு வருடப் பழமையான அந்தத் ‘தியாகராச விலாசம்’ இடித்துத் தள்ளப்பட்டது. வேறொரு நாடாக இருந்திருந்தால் அரிய பல பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அந்தப் பெருந்தகையின் நினைவாக அந்த வீட்டை அறிவுத் திருக்கோயிலாக ஆக்கியிருப்பார்கள்திருக்குறளை சேக்கிழார் எழுதினாலென்ன .? கம்பர் எழுதினால் நமக்கென்ன? என்று மொண்ணைச் சமூகத்தின் முழுமுதற் பிரதிநிதியாக நின்று வேடிக்கை பார்த்தது நம் அரசு.

***

மாலை (சிறுகதை)

அன்று ஞாயிற்றுக்கிழமை,பேருந்து நிலையம் புதிதாய் எழுப்பும் வேலை சுறு சுறுப்பாய் தொடங்கி முடிவுறும் காலம் நெருங்கியதால், சாலையோரத்தில் இருபக்கமும் பயணியர்கள் கூட்டம் அலை மோதியது போக்குவரத்துக்காவலர் கூட்டத்தை ஒழுங்கு படுத்த பின் மீண்டும் கலைவதாய் இருக்கும் வேளையில்,

"முத்தம்பட்டி போற வண்டி வருமா" என்று கேட்டபடியே ஒரு ஞெகிழிப்பையில் ரோசாப்பூ மாலையோடு நின்று கொண்டிருந்தான்

எங்க நிக்க ? போதையில தள்ளாடிக்கிட்டு இருந்தான்.

"ஓரமா நில்லு வரும்,

சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க இளைஞனுமல்லாத முதியோருமில்லாத ரெண்டுங்கெட்டான்

போக்குவரத்து காவலர் அவரிடம்

"கோயில்ல ஏதாவது விசேசமா,

"மாலையக்கோயிலுக்குத்தான் வாங்கனுமா,செத்தவங்களுக்கு வாங்கப்படாதா, முட்டாப்பெய எலுமிச்சை மாலைய குடுடானு கேட்டேன் ஓசாப்பூ மாலையக்குடுத்திருக்கான்

ஓசாப்பூ மாலைய,செத்தவங்களுக்கு எலுமிச்சை மாலை போடக்கூடாதுனு கவருமெண்டு சீஓ போட்டுருக்கா,

இதுக்கு மேல இவன்ட்ட பேசுனா குடிகாரன் யாருனு தெரியாம போயிரும்னு ஒதுங்கியதும்

ஏதோ ஒரு வண்டியில் ஏறினான்,அவன் கடுமையான போதையிலிருப்பதை உணர்ந்த நடத்துனர்

"எங்கயா போகனும்போகனும்,

"போகும் போதே எங்க போறனு கேக்கக்கூடாதுனு எங்க தாத்தா சொல்வாரு,

"அது யாருயா உங்க தாத்தா,

"இதோ இந்த ரோசாப்பூ மாலைக்கு சொந்தக்காரரு,

"சரி போற இடத்துக்கு சீட்டு எடு,

"கேட்டுக்கறேன்,

தள்ளாடியவாறே தனது கைபேசியில் தொடர்பு கொண்டான்

"மாப்புள நான் ரோசாப்பூ மாலையோட வந்துக்கிட்டு இருக்கேன் எங்க இறங்கனும்,

"..................

"என்னது சுடுகாட்டுக்கு தூக்கிட்டுப்போயிட்டாங்களா, யோ கண்டக்டரு சுடுகாட்டுக்கே டிக்கெட்ட குடுத்திரு,

"யோ நீ என்ன அரை லூசா,சுடுகாட்டுக்கு டிக்கெட்டு கேக்க முதல்ல படியில நிக்காம மேல வாயா,

"உள்ள வந்தேன்னா உனக்கும் சிக்கல் ஒக்காந்திருக்குறவங்களுக்கும் சிக்கல்,

ஆமா எனக்கு திடீர் திடீர்னு வாந்தி வரும் வரட்டுமா வந்து எங்க நிக்கனும்,

"சாவு கிராக்கி காலையிலயே குடிச்சுப்போட்டு உசுரை வாங்குறான்,

"தம்பி படியில நின்னுக்கிட்டு வர்ரது சரியில்ல உள்ளவா இடங்கெடக்கு", என்றார் ஒரு பெரியவர்

"யோ சும்மா இருமய்யா உள்ள வந்து வாந்தீ கீந்தி எடுத்தான்னா, வண்டி நாறிப்போகும். எல்லாம் கோயில் குளம்னு போயிக்கிட்டிருக்காங்க,

"கீழ விழுந்து செத்து கித்து தொலைஞ்சான்னா அது வேற சனியன்,

"இவன் செத்தவனுக்கு மாலை போடப்போறானோ,இவனே செத்து சொந்தமா மாலை போட்டுக்கப்போறானோ"

இப்படிச்சொன்னவன் வாயில சக்கரையத்தான் போடனும் இறங்கக் கூடிய இடத்துல இறங்கியவன் மாலைப்பையை வாயில கவ்விக்கிட்டு வேட்டிய கட்டிக்கிட்டே நடந்தவன்தைன் கீழ கெடந்த பௌரியை கல்லு எத்திக்குடுத்து பாலத்துக்குக் கீழ விழுந்தவனை மீட்டதுதான் தாமதம்

"ஆளு அவுட்டு"

"அட நம்ம சாதிக்காரப்பெய செல்லம்மா புருசன்,குடிகாரப்பெயலுக்கு ஒரு சாவோ வரமாட்டேங்குதேனு என்னைப் பாக்குற வேளையெல்லாம் புலம்புவா,

ம் ம் பத்தினி சொல்லு பலிச்சிருச்சுய்யா,

அவனை ஒரமாய்க்கிடத்தி தகவல் சொல்லி விடப்பட்டது,அவன் வந்த ரோசாப்பூ மாலை அவனுக்காகவே கட்டி வச்சமாதிரி இருந்ததுங்றத நான் சொல்லலை,அவன் கையில மாட்டிக்கிட்டு முழிச்ச ரோசாப்பூ மாலையே சொல்றது போல இருந்தது,

அந்தக் கொடிய வெயிலிலும் கூட கொஞ்சமும் வாடாத ரோசாப்பூ மாலை அவன் மார்பையும்,கழுத்தையும் தழுவியவைறே கூறிப்புன்னகை பூத்தது.

'கொஞ்ச ஆட்டமாடா ஆடுன' என்று !

****

--- சீனியம்மா தமிழ்ப்பித்தன்

ஏன் சாத்தியமில்லை ?

நூறு வயது வரை வாழ...

"அரையும் குறையாய்ப் போவதவனவன் அறிவும் செயலும் தானடா"னு பட்டுக்கோட்டை சும்மா படிக்கல,

முதிர்ந்த நெல்லிக்கனியும்,மூத்தோர் சொல்லும் முன்பு புளிக்கும் பின்பு இனிக்கும் னு சொன்னதை எத்தனை பேர் கேட்டோம்.

காலை இஞ்சி கடும் பகல் சுக்கு மாலை கடுக்காய் என உண்டவர் யார் ?

வேட்டி கட்டுனவன் மட்டும் வியத்தகு வாழ்வை வாழ்ந்திருக்காங்க,

அல்மா வேலாயுதம் (தமிழ் மருத்துவர்) சொல்வாரு ஆண்கள் பெரும்பாலும் பேண்ட் அணிய ஆண்மை அடிபடும்ங்றாரு. ஒட்டுப்போட்ட வயருக்கு டேப்பு சுத்துன மாதிரி டைட்டா ஆடை அணிவதைக் குறைங்க.

2) பசிச்சா மட்டும் சாப்பிடுங்க.

3) ஏசி காற்றை தூரப்போட்டு,இயற்கை காற்றை அனுபவிங்க.

4) வாயில் போடும் உணவை கூழ் கூழா அரைச்சு உமிழ் நீரோட முழுங்குங்க

5) சாப்பிட அமரும் போது பாழாப்போன தொலைபேசி டிவினு கவனம் செலுத்தாம, உணவின் ருசி மீது கவனம் செலுத்துங்க.

6) மௌன விரதத்தை அதிகமா கடைப்பிடிங்க

7) ஆத்துத்தண்ணி வாதம் போக்கும், அருவித்தண்ணி பித்தம் போக்கும், சோத்துத்தண்ணி ரெண்டும் போக்கும்னு சொன்ன மாதிரி பழைய சோறு சாப்பிடுங்கய்யா !

7) தூக்கம் வந்தா மட்டும் தூங்குங்க

8) காலை ஆறு மணிக்குள் எழுந்து காலைக்கடனை (உணவு பசிச்சா மட்டும்) முடிச்சிருங்க

9) நாளுக்கிருமுறை,வாரமிரு முறை மாதமிரு முறையை கண்டிப்பா கடைப்பிடிங்க

10)ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெய்யை வாயில் கால் மணி நேரம் வைத்திருங்கள்

11)பிராய்லர் கோழியோ முட்டையோ தொட்டுடாதீ(தி)ங்க

12) என்ன பலகாரம் சாப்பிட்டாலும் எண்ணை பலகாரம் சாப்பிடாதீங்க

13)வியர்வை வெளியேற வியாதி வெளியேறும் சில பயிற்சி செய்யுங்க

14)உடல் எடை கூடாம தொப்பை போடாம, ஒன்பது ஓட்டையிலும் அழுக்குச் சேராம பாத்துக்கோங்க

15)ஆங்கில மருந்தை அறவே தவிர்க்கப்பாருங்க

16)மாத்திரை வேண்டவே வேண்டாம்

17)இயற்கை உணவுக்கு மாறுங்கள்

18)கண்டிப்பா காலணி அணியாம காலம் கடத்துனா மிக மிக மிக மிக மிக நல்லது

---- **சீனியம்மா தமிழ்ப்பித்தன்**

புடவை (சிறுகதை)

பொட்டி பொட்டியா பொடவை இருந்தாலும் இந்தப் பொம்பளைகளுக்குப் பொடவை ஆசை மட்டும் போகாது,

அத்தோட அவங்களோட துணிகளை வைக்கிறதுக்குனே இரும்பறையை (பீரோ) தனியா ஒதுக்கி வச்சிருப்பாங்க,

மொத்தம் எண்ணிப்பாத்தா துணிக்கடை தோற்று விடும். இந்தப் புடவைகளை அவங்க தனித்தனியா பிரிச்சு வைக்கிற விதம் இருக்கே இதை எந்தக்கல்லூரியும் கத்துக்கொடுக்க முடியாது,

மேல் தட்டுல விலை கூடிய பட்டுப்புடவை,இந்தப்புடவையை கட்டிக்கிட்டாங்கனா புருசனை தொட விடமாட்டாங்க

"கைய வச்சுக்கிட்டு சும்மா இருக்கனும் கசங்கிருச்சுனா தேய்க்கப்போடனும்,அழுக்காயிருச்சுனா சலவைக்குப் போடனும்,ஒரு தடவை பட்டுப்புடவையை சலவைக்குப் போட்டு எடுத்தா நூறு ரூபா ஆகுது தெரியுமா"னு புருசனை கடிந்து கொள்வாள்,

"அப்போ எப்போதான்டி உன்னை ஆசையோட கட்டிப்பிடிக்கனு" மனசுக்குள்ளயே கேட்டுக்குவாரு ரகசியத்தைப் போட்டு உடைச்சிட்டா பெரிய பிரச்சனையாயிரும்ங்றது பெருமாளுக்குத் தெரியும்,இந்தப் பெருமாளுக்கு பெருந்துணையாவோ, பெருவினையாவோ வந்தவதான் பெருமாத்தா,

நாலும் பசங்க. இருபத்தாறு வருடத்திற்கு முன்பு.

இப்போ எல்லாருக்கும் திருமணமாகி கூட்டுக்குடும்பமா இருக்காங்க,பேரன் பேத்தினு,

கிட்டத்தட்ட அறுபத்தெட்டுக்கு அறுபத்தாறுனா பாத்துக்கோங்க . பெருமாளுக்கும் பெருமாத்தாளுக்கும் ரெண்டு வயது தான் குறை. ஆனா வேற ஏதும் இல்லை குறை,

மருமககாரிக கூடிப் பேசக்கூடாது. சத்தம் போட்டு பேசுனா கரடி மாதிரி கட்டுறேம்பா,மெதுவா பேசுனா பொரணி பேசுறேம்பா,

பெருமாத்தா நல்லவ தான்

பழைய சேலை இருந்தா குடுங்கம்மானு பிச்சைக்காரியோ வேற யாரோ இவ கிட்ட கேட்டு தப்பிக்க முடியாது,

"போடி பொசலத்தவளே பழையதுனு யாரு கிட்ட வந்து கேக்குற. நான் பழையதுனு நெனைச்சிருந்தேன்னானு சொல்லியதும், பார்வை பெருமாளை நோக்கியது. அதைப்புரிந்து கொண்ட பெருமாள்,

"அதான பழையதை கழிக்கிறதா இருந்தா நாம ரெண்டு பேரும் இந்த வீட்டுல இருந்திருக்க முடியுமா?" என்று பெருமாள் சொன்னதின் விசமத்தனத்தை புரிந்து கொண்டு

"ஏன்யா அப்போ நான் ஒன்னிய பழையதுனு நெனைக்கிறதா நெனைக்கிறியா?"

"சீசீ அப்படி நீயும் நெனைக்க மாட்ட நானும் நெனைக்க மாட்டேன், என நக்கலாக சொன்னதை பெருமாத்தா புரிந்து கொண்டு பேச்சை திசை திருப்பினாள்,

"சரி ஏ மருமக்க மாருகளா !" என்று குரல் கொடுத்ததும்,மூடிய பலாச்சுளையின் திரை அகன்றதும் ஓடி வந்து மொய்த்துக்கொள்ளும் ஈக்களைப்போல

"அத்தே கூப்பிட்டேகளா, என்றார்கள் ஒரே கோரசில்

"ஆடி முளைக்கெட்டுக்கு சேலை எடுக்க எந்தக்கடைக்குப் போறீங்க?

மருமககாரிக அடுக்குனாக.

"போத்தீசு கடைக்குப் போவோம்,

"ஆனந்தம் கடைக்குப் போவோம்,

"ராதா கிருட்டிணன் கடைக்குப் போவோம். ஆனந்த சோதி கடைக்குப்போவோம், என்று மருமககாரிக அடுக்குனதும், "பரவாயில்லேங்க நம்ம சொந்தக்காரங்க கடையாத்தான் சொல்றாங்க ,

"அத்தே இந்த வருடம் முளைப்பாரி மாதிரியே பார்டர் வச்ச சேலை வந்திருக்கு. அதை எல்லாரும் ஒண்ணு போல எடுத்துக்கெட்டுவோம்.

"உங்க அத்தைக்கு மட்டும் அக்னி சட்டி மாதிரியே பார்டர் வச்ச சேலை வந்தா எடுங்க,அப்புறம் பாக்குறவங்களுக்கு மாமியா மருமக வித்யாசம் தெரியாம போயிரும் என்றோ நக்கலடித்தார்

எப்படியோ இந்த ஆண்டு விலையுயர்ந்த பட்டுப்புடவையா எடுத்தாச்சு அஞ்சு பேருக்கும், நாளை மாலை முளைப்பாரி பாக்கப்போகும் போது பட்டுச்சேலையை கட்டனும்ங்ற ஆசை மருமககாரிய விட மாமியாளுக்குத்தான் அந்த எண்ணம் மேலோங்கி நின்னுச்சு.

"ஏன் பெருமாத்தா, அவங்க தான் வயசுப்புள்ளைக பட்டுச்சேலை கட்ட ஆசப்படுறாங்க. அறுபத்தாறு வயசுக்குப்பெறகு ஒனக்கு எட்டாயிரத்துக்கு பட்டுச்சேலை தேவையா, தள்ளுபடில எடுத்ததுங்க."

"வெளக்கமாறு, தள்ளுபடிங்ற பேரால ஒண்ணுக்கு ரெண்டு மடங்கு வெலை வைக்கிறான் இது தெரியாம, சரி நான் தெரியாமதான் கேக்கறேன், நூத்துக்கு மேல சேலை இருக்கு. உன்னைத்தவிர எல்லாச்சேலயும் புதுசாத்தான இருக்கு.

"உங்களுக்குப் பொறாமை, என் மருமக்கமார்களே ! அப்படி என்ன அத்தே ஒங்களுக்கு வயசாயிருச்சுனு கேக்காங்க தெரியுமா ?",

"அடியே இதெல்லாம் பேசுறது உங்கிட்ட இருக்கிற பணப்பொட்டி சாவிய புடுங்கடி,

"உங்க புடுங்கு தான் பெரிய புடுங்கா இருக்கு,

"சரி விடு நம்ம வீட்டு வேலைக்காரிக்கு உனக்கு ஆகாத சேலை இருந்தா ஒண்ணு குடுத்து விடு,

"எனக்கு ஆகாததுனா நீங்கதான் உங்களை பழைய இரும்புக்கும் போட முடியாது,எலும்புக்கும் போட முடியாது,

"என்னை எலும்பும் தோலுமா இருக்கேனு குத்திக்குத்தி காட்டுறியே யானைமாதிரி இருக்கேனு நான் எப்பவாவது சொன்னேனா" ஙறத மனசுக்குள்ளயே சொல்லி தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார்

"சரி போ போய் சேலைய அறையில வச்சுட்டு வா,

"பீரோவுல வச்சுட்டு வாரேன்", என்று மாடிப்படியேறி கதவைத்திறந்து சேலையை எண்ணிப்பாத்தா, இத்தோட நூத்தி எட்டு சேலைனு சொல்லிக்கிட்டே சேலையப்பாத்தா.

எல்லாச்சேலையும் கூட்டுக்குடும்பமா இருக்குறதுனால பெருமாத்தாளைப்பாத்து, "உம் முகரைக்கு எட்டாயிரத்துக்கு சேலை, எந்தப்பய உன்னை இனிமே சீந்தப்போறான் ?சரி சேலை கெட்டுறாப்ல ஒடம்பு வச்சிருக்கியா? இருநூறு வருட வேப்ப மரத்துக்கும், அரச மரத்துக்கும் சுத்திக்கட்டுன சேலை மாதிரி ஒடம்ப வச்சிருக்கனு பொரிஞ்சு தள்ளிருச்சு.

நாளைக்கு கெட்டப்போற பட்டுச்சேலை கனவுலயும், மயக்கத்துலயும் இருந்த பெருமாத்தாளால மறுநாள் ஒரு கூத்தே நடந்து போச்சு.

பேருந்துப்பயணத்துல இருக்குறவன் எப்படா வண்டிய எங்கடா நிறுத்துவான் சிறு நீரகம் கழிக்கலாம்னு மூணு மணி நேரமா அடக்கி வச்சிருந்த மாதிரியே மாமியாளை நெனைச்சு மருமககாரிக சிரிப்பை அடக்க மாட்டாம வச்சிருந்தாக.

"பெருமாள் சார் எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதீங்க, எப்படியும் உங்க சம்சாரம் படுக்கையை விட்டு எழுந்து நடக்க கொறைஞ்சது ஆறு மாசமாவது ஆகும். பாவம், மாடியில இருந்து கிட்டத்தட்ட ஒரு பதினெட்டுப்படியாவதோ உருண்டுருப்பாங்க.

"பாதவத்தி மக பதினெட்டாம் படியானை பாக்கப்போகணும், போகணும்னு சொல்லிச் சொல்லி பதினெட்டு வருசம் ஓடிப்போச்சு.

மருமககாரிக ஒருத்தரை ஒருத்தர் பாத்துக்கிட்டு, இவ விழுந்து தொலைச்சதும் இல்லாம முளைப்பாரிக்கு நம்மையும் பட்டுப் புடவை கெட்டாம ஆக்கிட்டாளே !

அப்போது பெருமாளின் காதில் கலகலவென ஒரு சிரிப்பு சத்தம் கேட்டது,அது வேறு எங்கிருந்துமல்ல. பெருமாத்தா ஆசையோடு பூட்டி வச்ச பட்டுச்சேலையில இருந்துதான்ஙறது பெருமாளுக்கு மட்டும்தான் தெரியும் !

--- சீனியம்மா தமிழ்ப்பித்தன் (புனல்வேலி)

"நீல நிலா" செண்பகராஜன் படைப்புகள்

நீ சாப்பிட்டாய்

இனிப்பு.

இனிப்பிற்கும் வந்தது

சுகர்.

உன் உதட்டு இனிப்பால்

உன் செல்ஃபி தரிசனம் தான்

எனக்கு தீபாவளி.

நீ முத்தமிடும்

உதடுகள்

சொர்க்க வாசல்கள்.

உன் முத்தத்திற்காகக்

காத்திருக்கும்

என் உதடுகள்.

உன் உதடுகளால்

ஒத்தடம் கொடு.

நீ என் காதல்.

நான் உன் ஜீவன்.

ஜீவனுள்ள காதலாவோம் நாம்.

நான் உன் நிழல்.

நீ என் நிஜம்.

நீ கண் மூடினாய்.

இரவு உடையில்.

என் உயிர்

பகலாய் விழித்தது.

நீ வண்ணமயமாய்

வானவில் ஆனாய்.

நானோ,

குடை பிடித்தபடி உன்

அழகு மழையில் !



திரை உலகின் மும்மூர்த்திகள்.


வெற்றிப் படங்களின் உற்சவர்கள்.

கருப்பு வெள்ளை படங்களில்

வண்ணங்களை வரைந்த தூரிகைகள்.

3 எழுத்தில் பெயரில்

கலை உலகை ஆண்ட கடவுள்கள்.





மதுரையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் பட்டி மன்ற நடுவர் கு.ஞான சம்பந்தன் அவர்களுக்கு "நீல நிலா" இதழை , இதழாசிரியர் "நீல நிலா" செண்பக ராஜன் பரிசாக வழங்கும் காட்சி

Shakespeare's Desk

"ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்" புத்தக நிறுவனத்தின் வெளியீடுகள்

1. கான்டெர்பரி கதைகள் –(ஜெப்ரி சாஸர்) - மொழிபெயர்ப்பு **ரூ. 100 -00**
2. முத்தா ---- (சிறுகதைகள்) -- **ரூ. 80-00**
3. எலியாவின் கட்டுரைகள் --(சார்லஸ் லாம்ப்) – (மொழிபெயர்ப்பு) **ரூ. 150 -**
4. நகைச்சுவைக்கதைகள் --(ஆர். கே. நாராயண் , ஸ்டீபன் லீகாக்) (மொழிபெயர்ப்பு) **ரூ. 150-00**
5. டைனோசர் ஆயிரம் சூழ வலஞ்செய்து ...(சிறுகதைகள்) **ரூ. 150 -00**
6. ஆண்டாளம்மா தேசம் (கட்டுரைகள்) ..... **ரூ. 150 - 00**

7 மோசஸ் மாணிக்கவாசகம் பிள்ளையவர்களின் ரெண்டு புத்திரிகளின் மகாத்மியம்... (குறுநாவல்கள்) ..... **ரூ. 150 -00**

8. கதவு எண். 43, ரயில்வே பீடர் ரோடு --(சிறுகதைகள்)-- **ரூ. 150 – 00**
9. சில சுகமான நாட்கள் --(முழு நீள தமிழ்த்திரைக்கதை) -- **ரூ. 150 –00**
10. Srivilliputtur : *Ruminations of a Rambler* (Essays) **– Rs. 150-00**
11. *Another Winter Evening and hot tea cups* (English verses) – **Rs. 150-00**
12. Nammazhwar *: The Saint and his Science (* A treatise on *Thiruvaimozhi*) - Available on www.amazon.in
13. *On the Substitution of the Roman for the Indian Characters* by Rev. Dr Robert Caldwell Ed. S. Ramesh ... *on print*
14. *Narkarunai tyanamalai* by Rev. Dr Robert Caldwell, Ed. S. Ramesh .... *on print*
15. *Records of the Early History of the Tinnevelly Mission, etc .* by Rev. Dr Robert Caldwell Ed. S. Ramesh ... *on print*

16. 16 – முதல் 19 -ம் நூற்றாண்டு வரையிலான ஆங்கிலக்கவிதைகள் - (மொழிபெயர்ப்பு[ ) **ரூ. 150 – 00**

17. தவறான தமிழ்த்தாய் வாழ்த்து-- (கட்டுரைகள்) **ரூ. 150 –00**

18. இலக்கிய நெறி :: விமர்சன நெறிமுறைகள்-

(பிளாட்டோ முதல் க்ளியாந்த் ப்ரூக்ஸ் வரை) ***....*** ரூ. **150-00**

19. *Lectures on the Tinnevelly Missions – Descriptive of the Field, the Work and the Results & other rare works by Rev Dr Robert Caldwell (Reprint).*

Rs. 200-00

20. கரிசனம் -- --(சிறுகதைகள்) ரூ. **200 – 00**

21. மொழிபெயர்ப்புக்கவிதைகள் –(எமிலி டிக்கின்சன், டி. எச். லாரன்ஸ்) ரூ.**120 -**

22. இந்திய வரலாறு – பாகம் – 1 (பொய்யும் மெய்யும்) ரூ**. 300-00**

புத்தகங்களின் தேவைக்குத் தொடர்பு கொள்ள :

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

“ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்”

எண் 33 தெற்கு ரத வீதி

ஸ்ரீவில்லிபுத்தூர் அ. கு. 626 125

விருதுநகர் மாவட்டம். அலை பேசி : 90805 51905